60 கழுக்கம்

தமிழ்நாடு சட்டமன்ற மேலவை
முன் வைக்கப்பட்டது
19 அக் 2012



நீதியரசர் திரு. கே. [illegible]
விசாரணை ஆணை[illegible]

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில்
11.09.2011 அன்று காவல் துறையினர் நடத்திய துப்பாக்கிச் சூடு
சம்பவம் குறித்து விசாரணை செய்வதற்கான
விசாரணை ஆணையம்

TRUTH ALONE TRIUMPHS

நீதியரசர் திரு. கே. சம்பத்
விசாரணை ஆணையத்தின் அறிக்கை

பகுதி – II


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

நீதியரசர் திரு. கே. சம்பத்
விசாரணை ஆணையம்

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில்
11.09.2011 அன்று காவல் துறையினர் நடத்திய துப்பாக்கிச் சூடு
சம்பவம் குறித்து விசாரணை செய்வதற்கான
விசாரணை ஆணையம்

நீதியரசர் திரு. கே. சம்பத்
விசாரணை ஆணையத்தின் அறிக்கை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
சட்டமன்ற பேரவை
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பகுதி – II

நீதியரசர் திரு. கே. சம்பத்

விசாரணைக் குழு அறிக்கை

பகுதி II

1.	தொடக்க ஏற்பாடுகள்	737-738
2	சுதந்திரத்திற்கு முந்தைய மற்றும் உடனடி பிந்தைய காலகட்டத்தில் இருந்த நிலைமை.	739-746
3	இராமநாதபுரம் மாவட்டமும் அது தற்போது எதிர்கொள்ளும் இடையூறுகளும்	747-749
4	சிலைகள் நிறுவுதல், பிறந்தநாள் கொண்டாடுதல் மற்றும் நினைவு நாள் அனுசரித்தல் பற்றி ஆணையத்தின் கருத்து	750-752
5	இராமநாதபுரம் மாவட்டத்தின் நிர்வாகம் செய்யவேண்டியவை மற்றும் செய்யக்கூடாதவை.	753-755
6	காவல்துறை செய்யவேண்டியவை மற்றும் செய்யக்கூடாதவை	756-776
7	மாநில அரசுக்கு ஆணையம் முன்வைக்கும் பரிந்துரைகள்	777-779
8	இராமநாதபுரம் மாவட்டத்தில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் – ஒரு பன்முக நோக்கு	780-781
9	பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கான பிற ஆலோசனைகள்	782
10	பொது மக்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுபவை	783-787
11	பொது மற்றும் தனியார் சொத்துக்களை சேதப்படுத்துவது பற்றிய உச்சநீதி மன்றத்தின் கருத்து	788-789
12	பல்வேறு ஆதாரங்களிலிருந்து எடுக்கப்பட்ட கட்டுரைகள் மற்றும் கருத்துருக்கள்	790-807
13	1991 முதல் 2011 வரையிலுள்ள இடைப்பட்ட காலத்தில் இராமநாதபுரம் மாவட்டத்தில் அதிகளவில் பாதிப்பை ஏற்படுத்திய இனக்கலவரங்கள்	808-863
14	உயர் பதவியாளர்களின் பரிந்துரைகள் அடங்கிய அட்டவணை இணைப்பு–1	1-213
15	ஒப்புகை	1-4

பாகம் 2

அத்தியாயம்–1 தொடக்க நடவடிக்கைகள்

இந்த ஆணையம், நான்காவது ஆய்வு வரம்பு குறித்து நடவடிக்கை எடுக்கும் நோக்கில் அதாவது, இனிவரும் காலங்களில் இத்தகைய சம்பவங்கள் மீண்டும் நிகழாமல் தடுப்பதற்கு தகுந்த நடவடிக்கைகளை பரிந்துரைப்பதற்கு தலைச்சிறந்தவர்கள் , சமூக அக்கறை கொண்ட மக்கள், முன்னாள் மற்றும் அந்நாள் அதிகாரவர்க்கத்தினர், சட்டம் மற்றும் ஒழுங்கு மற்றும் கலவர சூழல்களை எதிர்கொள்வதில் மிகுந்த அனுபவம் பெற்ற காவல்துறை அதிகாரிகள் ஆகியோரின் எண்ணங்களையும் அனுபவங்களையும் பகிர்ந்துகொள்ளும் வகையில் அவர்களின் கருத்துக்களை கோரியது. அப்போது தான் இனிவரும் காலங்களில், காவல்துறையினருக்கும் மக்களுக்குமிடையே அத்தகைய இன மோதல்கள் அல்லது கலவரங்கள் நடைபெறுவதை தடுப்பதற்காக அரசு எடுக்கவேண்டிய நடவடிக்கைகளை பரிந்துரைப்பதற்கு, தேவையான தகவல்களை ஆணையம் பெற இயலும். இதற்கு பெருத்த வரவேற்பு கிடைத்தது.

பெரும்பாலான அழைப்பாளர்கள் ஆணையத்திற்கு வந்து அவர்களின் கருத்துக்களை தெரிவிப்பதில் போதிய ஒத்துழைப்பு நல்கினர். இந்த ஆணையம் முன்னிலையில் ஆஜராகி வாய்மொழியாகவும் எழுத்துமூலமாகவும் தங்கள் கருத்துக்களை தெரிவித்த நபர்களின் பட்டியல், அவர்களின் கருத்துக்களுடன் இந்த அறிக்கையின் இணைப்பு-1ல் அவர்களின் அகர வரிசைப்படி பெயர்களுடன் இணைக்கப்பட்டுள்ளன. இந்த ஆணையம், அரசு கருதிப்பார்த்து செயல்படும்வகையில் குறிப்பிட்ட சில வழிகாட்டிக்குறிப்புகளை வகுத்துள்ளது.

உண்மையில் என்ன பிரச்சினை ?

ராமநாதபுரத்திற்கு என்ன நேர்ந்தது ?

ஏன் இந்த பகுதியில் பதற்றம் நிலவுகிறது ?

இதனை தடுப்பது சாத்தியமா ?

ஆம் எனில், எவ்வாறு இதனை செய்யலாம்.

இல்லை எனில், இதனை எவ்வாறு அடக்குவது ?

மாவட்ட நிருவாகம் என்ன செய்ய வேண்டும் ?

காவல் துறையினர் என்ன செய்ய வேண்டும்?

அரசு என்ன செய்ய வேண்டும்?

மக்களின் எதிர்பார்ப்பு என்ன?

மேற்சொன்னவற்றுக்கு விடைகளை கண்டுபிடிப்பதற்காக நாம் அந்த பகுதியின் சில வரலாற்றையும், சில புவியியலையும் மற்றும் சில பொருளாதாரத்தையும் நாம் சிறிதளவு ஆராய வேண்டியுள்ளது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பகுதி 2

அத்தியாயம் 2

இந்தியா சுதந்திரம் பெறுவதற்கு முந்தைய காலத்திலும் அதன்பின்னரும்

பாஞ்சாலங்குறிச்சி பாளையக்காரர் வீரபாண்டிய கட்டபொம்மன், கிழக்கிந்திய கம்பெனி தலைமையை எதிர்க்கத் தொடங்கியதிலிருந்தே, ராமநாதபுரத்திலும் பரிவு எழுச்சிகள் தோன்றின. 24.04.1981 அன்று, ஆயுதம் தாங்கிய படையினர் அபிராமத்திலுள்ள வட்டாட்சியர் அலுவலகத்தை தாக்கினர். இவர்கள், இரண்டு சிறைகைதிகளை விடுவித்த பின்னர், அவில்தாரை காயமேற்படுத்தி, சிப்பாய்படையினரின் ஆயுதங்களை பறித்துக்கொண்டனர். இந்த கலவரக்காரர்கள், மக்களுக்கு எந்தவொரு தீங்கும் இழைக்காமல், சிப்பாய்களின் துப்பாக்கிகளையும், பழங்காலத் துப்பாக்கி வகைகளையும் கைப்பற்றுவதில் அதிக ஆர்வம் காட்டினர். இந்த தாக்குதலின் பின்னணியில், துப்பாக்கிகளை சூறையாடுவது மட்டுமன்றி மற்றொரு ஆழ்ந்த நோக்கமும் மறைந்திருந்தது. சேதுபதியை அரியணையிலிருந்து அகற்றி கிழக்கிந்திய கம்பெனியின் நேரடி ஆட்சி கொண்டுவரப்பட்டதை தொடர்ந்து இந்த கிளர்ச்சி ஏற்பட்டது. (கிழக்கிந்திய கம்பெனி 1792ஆம் ஆண்டில் உடன்படிக்கை ஒன்றின் வாயிலாக ராமநாதபுரத்தை முன்னர் கைப்பற்றியது. கிளர்ச்சிக்காரர்களின் தாக்குதல்கள் பன்மடங்கு அதிகரித்தன. கடலாடி பாளையக்காரர், கிளர்ச்சிகாரர்களுக்கு முனைப்புடன் ஆதரவளித்து, முதுகுளத்தூரிலுள்ள வட்டாட்சியர் அலுவலகத்தை தாக்குவதற்காக, அவருடைய ஆட்கள் 300 பேரை முதுகுளத்தூருக்கு அனுப்பிவைத்தார். முன்னர் இருந்த திருநெல்வேலி, மதுரை ஆகிய இரு மாவட்டங்களிலிருந்து ராமநாதபுரம் உருவாக்கப்பட்டது. ராமநாதபுரம் மற்றும் சிவகங்கை ஜமீன்களும், மதுரை மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களின் சில பகுதிகளும் ஒன்றிணைக்கப்பட்டு, ராமநாதபுரம் என்ற புதிய மாவட்டம் 1910ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. மாநிலத்திலேயே இந்த மாவட்டத்தின் தலைமையிடம் தான், மாவட்ட எல்லைக்கு வெளியே மதுரையில் அமைந்திருந்தது. இதன் ஆங்கில பெயர் ராம்நாட்.

1932 ஆம் ஆண்டு சுதந்திர போராட்ட காலத்தில், மாவட்டத்தில் அரசியல் நடவடிக்கை அதிகரித்தது, ஆனால் இது பெரும்பாலும் வன்முறை நடவடிக்கையாக இருந்தன. மார்ச்சுத் திங்கள் 29ஆம் நாளன்று, மறியல் செய்த கும்பலை சுட்டுக்கொன்ற காவல்துறையினர் தாக்கப்பட்டனர். மற்றொரு கிராமத்தில், கலவரக்காரர்கள், கைது செய்யப்பட்டு மறியல் செய்தவர்களுக்கு பாதுகாப்பாக இருந்த காவல்துறையினரை தாக்கி, கைது செய்யப்பட்டவர்கள் தப்பிக்க வழிசெய்தனர். விருதுநகர் நகரில் அதே

ஆண்டு ஜூலை மாதத்தில், அயல்நாட்டு துணிகளை விற்கின்ற கடை அருகே குண்டு வெடித்தது. ஆனால் எவருக்கும் காயமேற்படவில்லை.

அதே திங்கள் 30ஆம் நாளன்று ராஜபாளையம் அஞ்சல் நிலையத்தை அவர்கள் வெடிவைத்து தகர்க்க முயற்சி செய்தனர். ஜூலைத்திங்கள் 29ஆம் நாள், மானாமதுரையில் உள்ள வேல்ஸ் இளவரசர் படிப்பகம் வெடிகுண்டு வீசி பாதிப்பு ஏற்படுத்தப்பட்டது. இத்தாக்குதல்கள் வழக்கமாக இரவு நேரங்களிலேயே ஏற்படுத்தப்பட்டன. இதில் மக்களைக்காட்டிலும் சொத்துக்கள் மீது தாக்குதல் உத்தரவிடப்பட்டிருந்தது.

1942 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களில், தேசிய மற்றும் மாநில அளவிலான தலைவர்கள் கைது செய்யப்பட்டபோது ஏற்பட்ட எதிர்ப்பானது வன்முறையாக மாறியது. பொதுவாக தீவைப்பு சம்பவங்களே நடந்தன. நீதிமன்றங்கள், அலுவலகங்களில் மறியல்கள் நடந்தன. சில பேருந்துகள் தீவைத்து கொளுத்தப்பட்டன. அரிவாள், வேல் மற்றும் புல்லரிவாட்களுடன் கூடிய கூட்டம் அடிக்கடி தென்பட்டது. திருவாடனையில் 1000 பேர் கொண்ட கூட்டம் கூடி, காவல்நிலையத்தில் இருந்த துப்பாக்கிகள், படைத்தளவாடங்கள் கொள்ளையடிக்கப்பட்டதுடன், சார்நிலைக்கருவூலமும் அடித்து நொறுக்கி திறக்கப்பட்டதுடன், கருவூலமும் கொள்ளையடிக்கப்பட்டது.

<u>மக்கள்தொகை– பெரும்பான்மையான சமுதாய மக்களும் அவர்களது குணநலன்களும் தேவர்கள்/முக்குலத்தோர்</u>

இதில் கள்ளர், மறவர், அகமுடையார் என்ற முக்கியமான மூன்று உட்பிரிவுகள் உள்ளன. இம்மூன்று சாதியினரும், பழங்காலத்தில் தமிழ் மன்னர்கள் மற்றும் தலைவர்களின் படைப்பிரிவில் முக்கியத்துவம் பெற்று திகழ்ந்தனர். அந்நாளில் விவசாயத்தைக்காட்டிலும் போருக்கே முன்னுரிமை அளிக்கப்பட்டதோடு, பெரும்பாலான மக்களும் இதனை ஆதரித்தனர்.

அப்போதைய கள்ளர் மரபினர், ஒற்றர்களாகவும், கொரில்லா படைப்பிரிவிலும் இருந்த நேரத்தில், மறவர்கள் காலாட்படையிலும், அகமுடையார்கள் உடன் ஆணைபுரிபவர்களாகவும் தொழிற்படையிலும் இருந்தனர்.

மேற்சொன்ன மூன்று பிரிவினரில், பள்ளர் பிரிவினர் திருடு மற்றும் கொள்ளையடிக்கும் சுபாவம் கொண்டவர்களாகவும் இருந்த நிலையில், மறவர்கள் போர் நடவடிக்கையில் ஈடுபாடு கொண்டவர்களாக அறியப்பட்டனர். ஆனால் அகமுடையார் மற்றும் சேர்வை என்று அழைக்கப்படும் சமுதாய மக்கள் எப்பொழுதுமே குறைவான தீவிரவாதம் அல்லது தீவிரவாதமற்ற முறையில் தங்களுடைய எதிர்ப்பை தெரிவித்தனர்.

மேற்சொன்ன மூன்று சாதியினரில், மறவர் இனமக்கள் பரமக்குடி வருவாய் கோட்டத்தில், செல்வாக்கு மிக்கவர்களாகத் திகழ்ந்துள்ளனர். வரலாற்று சார்ந்த கால அளவில், இதில் ஏழு முக்கியமான உட்பிரிவுகள் இருந்தன.

(1) செம்பூநாட்டு மறவர்கள்

(2) கொண்டையன்கோட்டை மறவர்கள்

(3) அப்பநூர் நாட்டு மறவர்கள்

(4) அகத நாட்டு மறவர்கள்

(5) ஒரியூர் நாட்டு மறவர்கள்

(6) உப்புகோட்டை மறவர்கள் மற்றும்

(7) குறிஞ்சிக்காட்டு மறவர்கள்.

நவீனகால அளவில், அதாவது 1925–க்கு முன்னர், முதுகுளத்தூரில் மறவர் இனமக்களை சீர்படுத்தும் நோக்கத்திற்காக மிகப்பெரிய கட்டிடத்தில் மறவர் சங்கம் இருந்துள்ளது கண்டறியப்பட்டது. இருப்பினும், அப்பநாட்டு மறவர் சங்கம், முதுகுளத்தூர் மறவர் சங்கம், கமுதி மறவர் சங்கத்தின் வலிமையான வாழ்க்கைமுறையை ஒருவர் உணரமுடியும். மறவர்கள் எப்பொழுதுமே முரட்டுத்தனமானவர்களாகவும், தீவிரவாத நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களாகவும், அடிக்கடி குற்ற நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களாவும் இருந்தனர் என்பதை வரலாற்றுப்பதிவுகள் எடுத்தியம்புகின்றது. அவர்களுடைய குற்ற நடவடிக்கைகளைத் தடுப்பதற்கும், நாகரீகமான முறையில் அவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்கும், பிரிட்டிஷ் அரசாங்கமானது, குற்றப்பரம்பரைச் சட்டத்தை இயற்றியது. ஆனால், அப்பகுதியின் மோசமான பொருளாதார நிலை, அவர்களுடைய தொழில்முறை தேர்வினையும், அவர்களுடைய உலகளாவிய பார்வையில் எதிரிடையான விளைவுகளையே உண்டு பண்ணியது. மறவர்களால் மேற்கொள்ளப்படும் எந்த வகையான எதிர்ப்பும், தீவிரவாத வடிவாகவே எடுத்துக்கொள்ளப்பட்டது. இயல்பாக அவர்களுடைய போர்க்குண நடைமுறையானது போரில் வெற்றியை ஈட்டுவதற்காக தமிழ் மன்னர்கள், தலைவர் மற்றும் ஜமீன்தார்களால் நன்கு பயன்படுத்தப்பட்டதோடு அவர்கள் தனிப்பட்ட முறையில் சிறந்து விளங்கினர் என்பதில் ஐயத்திற்கிடமில்லை. இந்திய விடுதலைப்போராட்டத்தில் மறவர் சமுதாயத்தில் எண்ணற்ற மக்கள் மறைந்த நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் தொடங்கிய இந்திய தேசியப்படையில் பங்குகொண்டு தங்களுடைய தைரியத்தையும், உடலுழைப்பையும் வழங்கியதை எவர் ஒருவராலும் மறுக்க இயலாது.

மறவர் சமுதாயத்தில் நன்கு அறியப்பட்ட தலைவர்கள்

மருது பாண்டியர்கள்

மருது சகோதரர்கள் முறையே 1748 மற்றும் 1753ஆம் ஆண்டில் பிறந்தவர்கள். இதில் ஒருவர் ராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள கங்காரு தெருவைச் சேர்ந்த மொக்க பழனியப்பன் சேர்வை என்ற உடையார் சேர்வையும் பொன்னாத்தாள் என்கிற அன்னத்தாயி என்ற அவரது மனைவியும் ஆவர். மருது சகோதரர்களான பெரிய மருதுவும், சின்ன மருதுவும், சிவகங்கையை ஆட்சிபுரிந்த முத்துவடுகநாதனின் (1770) விசுவாசமான படைத்தளபதிகள் ஆவர். கர்னல் ஸ்மித் தலைமையிலான கிழக்கிந்திய கம்பெனியானது ராமநாதபுரத்தை தோற்கடித்த பின்னர் சிவகங்கையை நோக்கி முன்னேறியது. கம்பெனியாளர்களின் முயற்சியை அரசர் வடுகநாதர் தடைசெய்தபோதிலும், இப்போராட்டத்தில் அவர் தோல்வியுற்றதோடு, மாண்டு போனார். அரசரின் மனைவி வேலுநாச்சியாரும், மருது சகோதரர்களும் அங்கிருந்து திண்டுக்கல்லுக்கு தப்பியோடினர். அங்கு ஐதர் அலி அவர்களுக்கு புகலிடமளித்தார். இக்கூட்டணி நவாப்பினை சினங்கொள்ள செய்தது. முறையாக வருவாய் செலுத்துவது என்ற நிபந்தனையின் பேரில், ஆட்சிபுரிவதற்காக அரசியாரும், மருது சகோதரர்களும் சிவகங்கைக்கு திருப்பி அனுப்புவதற்கு அனுமதிக்கப்பட்டனர். அரசியார் 1780–ல் மருது சகோதரர்களிடம் ஆட்சிப்பொறுப்பை வழங்கினர்.

பாஞ்சாலங்குறிச்சியின் கட்டபொம்மன் பிரிட்டிஷ் ஏகாத்திபத்தியத்தை எதிர்த்துக் கொண்டிருந்த வேளையில், 1783 முதல் 1801 வரையில் மருது சகோதரர்கள் சிவகங்கையை எவ்வித குழப்பமுமின்றி அமைதியான முறையில் ஆட்சி செய்து வந்தனர். மருது சகோதரர்கள் ஊமைத்துரைக்கு ஆதரவு அளித்தது, கம்பெனிப் படையினர், சிவகங்கை கோட்டையை தாக்குவதற்கு வழிவகுத்தது. நீண்ட போருக்குப் பிறகு, 1.10.1801–அன்று கோட்டை கம்பெனியின் கைகளுக்கு வந்தது. மருது சகோதரர்களும், ஊமைத்துரையும் கைதிகளாக்கப்பட்டனர். மருது சகோதரர்கள் திருப்பத்தூரில் கோட்டை அரணில் முனைப்பான முகப்புடைய பகுதியில் தூக்கிலிட்டு கொல்லப்பட்டனர்.

முக்குலத்தோரில் அகமுடையார் அல்லது சேர்வை என்ற ஒரு சமுதாயத்தினர், இன்னும் மருது சகோதரர்களையே தங்களுடைய தலைவர்களாகப் பாவித்து வருகின்றனர். அவர்கள், அவர்களுடைய பிறந்தநாளை (ஜெயந்தி) பொங்கலுடன் சேர்த்து, தேவர் குரு பூஜைக்கு ஒரு நாள் முன்னர், சிவகங்கை மாவட்டத்தில் உள்ள காளையார் கோவிலில் இறுதியாக கூடுகின்றனர்.

முத்துராமலிங்கத் தேவர் (1908–1963)

கமுதிக்கு அருகில் பசும்பொன் என்ற இடத்தில் 30.10.1908 ஆம் நாளன்று முத்துராமலிங்கத் தேவர் பிறந்தார். இன்றளவும் தேவர்களின் ஒற்றுமையின் சின்னமாக விளங்குகிறார். 1924ஆம் ஆண்டு குற்றம்பரம்பரைச் சட்டத்தின் மீதான கடுமையான எதிர்ப்பின் காரணமாக, அவருடைய 26–வது வயதில் சிறப்புமிக்க அரசியல்வாதியாக உருவெடுத்தார். நீண்டகால போராட்டத்திற்குப் பிறகு, இச்சட்டத்தை அரசு திரும்பப் பெற்றதன் மூலம் இதில் வெற்றி கண்டார். இந்த ஆரம்ப கால வெற்றியானது அவரை மிகப்பெரியளவில் புகழடையச் செய்தது. இந்த நேரத்தில், இந்திய தேசிய காங்கிரஸ் கொள்கையினால் அவர் ஈர்க்கப்பட்டு, அந்தக் கட்சியில் இணைந்தார். 1937ஆம் ஆண்டு பொதுத்தேர்தலின்போது, அவர், காங்கிரஸ் கட்சியின் வேட்பாளராகப் போட்டியிட்டு, நீதிக்கட்சியின் வேட்பாளரான இராமநாதபுரம் ராஜாவை மிகப்பெரிய வித்தியாசத்தில் தோல்வியடையச்செய்தார். பின்னர், சுபாஷ் சந்திரபோஸ் தலைமையிலான காங்கிரஸ் கட்சியின் இடதுசாரிகள் பிரிவால் அவர் ஈர்க்கப்பட்டார். மதுரையில் உள்ள ஆலைத் தொழிலாளர்களின் போராட்டத்தின்போதும், இரண்டாவது உலகப்போர் காலஅளவு நெடுகிலுமாக 1938ஆம் ஆண்டில் 1 1/2 ஆண்டுகள் பலமுறை அவர் சிறையிலடைக்கப்பட்டார். அவர், 1946, 1952, 1957, 1962 ஆகிய தேர்தல்களில் சட்டமன்றபேரவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் முதுகுளத்தூர் கலவரத்தில் அவர் சிக்கவைக்கப்பட்டு வழக்கின் காலஅளவு நீட்டிக்கப்பட்டு பின்னர் அவர் வழக்கில் இருந்து விடுவிக்கப்பட்டார். (மேலும் விவரங்கள் பின்வருமாறு)

தேவேந்திர குல வேளாளர்/பள்ளர்

இந்தக்கோட்டத்தில் இரண்டாவதாக மிகவும் புகழ்பெற்ற சமுதாயமாக இருந்துவரும் பள்ளர்கள் சட்ட ஒழுங்கை பராமரிப்பதில் பெரும்பங்காற்றி வருகின்றனர். தமிழ் இலக்கியத்தில் 'பள்ளு' என்பது நீங்கலாக, இச்சமுதாயம் குறித்து வரலாற்றில் அதிகளவில் குறிப்பிடப்படவில்லை. வரலாறு ரீதியாக பள்ளர்கள் விவசாயத் தொழிலாளர்களே ஆவர். முந்தைய நூற்றாண்டுகளில், சாதிப் சம்பவங்கள் (கலவரங்கள்) இச்சமுதாய மக்கள் கலந்துகொண்டது தொடர்பான எந்தவித சம்பவங்களும் அறியப்படவில்லை. கடந்த நூற்றாண்டின் இறுதியில், மறவர்களுக்கும், நாடார்களுக்கும் இடையேயான சண்டையின்போது மறவர்களுக்கு எதிராக நாடார்களுக்கும், பள்ளர்களுக்கும் இடையே ஒரு பரஸ்பர புரிந்துணர்வும், முறைப்படி அமையாத அல்லது தனிமுறை ஒப்பந்தமும் இருந்ததாகக் கருதப்பட வேண்டியுள்ளது.

பழைய சங்க இலக்கிய கருத்தின்படி, பள்ளர்கள், மருதநிலத்தை பூர்வீகமாகக் கொண்ட பழமையான மக்கள் ஆவர். இந்நிலம், ஆற்றிற்கு அருகே அமைந்துள்ள, விவசாயத்திற்கு உகந்த நிலமாகக் கருதப்பட வேண்டும். அவர்கள் தேவேந்திர வம்சாவழியினராகக் கோரப்படாமல்

(மருதநிலத்திற்குரிய கடவுள்). தமிழ்நாட்டில் முதன்முதலில் நெல்லை விவசாயம் செய்தவர்கள் எனவும் அவர்கள் உரிமை கோருகின்றனர்.

பட்டியல் இன வகுப்பினர் வகுப்பின் கீழ் வரும் மூன்று பெரும் சமுதாயத்தினரில் இவர்கள் ஒரு சமூகத்தினர் ஆவர். பல்வேறு கூறுகளிலும் தனித்தன்மை பெற்று திகழ்கின்றனர்.

தமிழ்நாட்டிலுள்ள பட்டியல் வகுப்பு பிரிவினர் மூன்று பெரும் பிரிவுகளைக் கொண்டதாக உள்ளது. அவையாவன பறையர்கள் அல்லது ஆதி–திராவிடர்கள், பள்ளர்கள் அல்லது தேவேந்திர குல வெள்ளாளர்கள் மற்றும் சக்கிலியர் அல்லது அருந்ததியர். பறையர் சமுதாயமானது, ('பறை' அதாவது 'முரசு' எனும் இசைக்கருவியிலிருந்து வரப்பெற்ற பெயர்) தமிழ்நாட்டின் வடபகுதிகளில் அதிக எண்ணிக்கையில் பலம் மிகுந்து காணப்படுகின்றனர். இட ஒதுக்கீட்டுக் கொள்கையிலும், அரசியல் நிகழ்வுகளிலும் இச்சமுதாயத்தினரே பெரும்பலன் அடைகின்றனர். இச்சமுதாயத்தைச் சேர்ந்த இளைஞர்கள், விடுதலைச் சிறுத்தைகள் (திருமாவளவன் மற்றும் திருவள்ளுவனின் தலைமையில்) என்று அழைக்கப்படும் அமைப்பானது பட்டியல் இனத்தவரின் ஒன்றுபட்ட குழு என்று காண்பிப்பதற்காக சமீபத்தில் தொடங்கப்பட்டுள்ளது. இவ்வமைப்பானது, தமிழ்நாட்டின் வடபகுதியில், அடிக்கடி வன்னியர்களுடன் கலவரத்தில் ஈடுபடுகிறது. தென் தமிழ்நாட்டில் உள்ள பள்ளர் இன மக்கள், நடப்பிலுள்ள பிரிவினருக்கான இடஒதுக்கீட்டிலும், அரசியல் வகையிலும் ஏனைய இரு பிரிவினரைக் காட்டிலும் அதிகளவில் பயன் பெறுபவர்களாக உள்ளனர். இம்மானுவேல் சேகரனின் கொலை சம்பவமானது இப்பகுதியில் தலித்துக்கள் மேலெழும் நடவடிக்கையை நிறுத்தியது.

சக்கிலியர் அல்லது அருந்ததியர் என்றழைக்கப்படும் அதிக எண்ணிக்கையில் உள்ள தெலுங்கு மொழி பேசும் மக்கள் தோல் சம்மந்தமான பணிகளைச்செய்பவர்கள் ஆவர். இச்சமுதாயத்தினர் குறித்து பண்டைய தமிழ் இலக்கியத்திலோ அல்லது கல்வெட்டுக்களிலோ குறிப்பிடப்படாததால், அனேகமாக அவர்கள் தற்போதுள்ள ஆந்திரப்பிரதேசத்திலிருந்து குடிபெயர்ந்திருக்க வேண்டும். இவர்களுடைய தாய்மொழியானது தெலுங்கு மொழியாக இருப்பதால், இச்சமுதாய மக்கள் பெரும்பான்மையோருடன் இணையமுடியவில்லை. மேலும், இவர்களில் பெரும்பான்மையினர் இன்னும் அவர்களுடைய பரம்பரைத் தொழிலான தோல் சம்பந்தப்பட்ட தொழிலையே செய்து வருவதே, அவர்கள் சமூக நடவடிக்கைகளில் மேலெழுந்துவருவதற்கு முக்கிய தடையாக அமைந்துள்ளது. அவர்களில் குறைந்த அளவினரே அரசியலில் ஈடுபட்டுள்ளனர்.

ஆனால், பரமக்குடி பகுதியில், பள்ளர் சமுதாயத்தினரை உன்னிப்பாக கவனிக்க வேண்டியது அவசியம் ஆகும். இவர்கள், பரமக்குடி மற்றும் முதுகுளத்தூரில் பெரும்

எண்ணிக்கையில் வசித்து வருகின்றனர். இடஒதுக்கீட்டில் 50 ஆண்டுகளுக்குப் பின்னர், இச்சமுதாயத்தினிடையே பலமடங்கு விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது. சமுதாயத்தில் உயர்நிலையை அடைவதற்கு அவர்களுக்கு கல்வி உதவுகிறது. இருப்பினும், வடதமிழ்நாட்டில் தலித் இனம் மீண்டும் எழுந்துள்ளதுடன் ஒப்பிடுகையில், இவர்களுடைய வளர்ச்சியானது, அதிகளவிலான வன்முறை மற்றும் இரத்தக்கலவரங்களும் இணைந்ததே ஆகும். ஆனால், பல ஆண்டுகளாக, இச்சமுதாயத்தின் இளைய தலைமுறை வன்முறை அடித்தளங்களை எதிர்கொள்வதை தங்களின் சுபாவமாகக் கொண்டுள்ளது. மறவர் சமுதாயம் தங்களுடைய மேலாதிக்கத்தை மீண்டும் நிலைநிறுத்துவதற்கு முயற்சிக்கும்போது பள்ளர் சமுதாயமும், தங்களை நிலைநிறுத்திக்கொள்ள்வும், சமுதாயத்தில் சரிசமமான நிலையை அடைவதற்கும் முயற்சி மேற்கொள்கிறது. மறவர்களின் மேலாண்மைக்கு எதிரான பள்ளர்களுடைய வன்முறையை கண்டனம் செய்யும் ஒருவர் 'ஒருவர் ஆயுதம் ஏந்துவதால், எப்பொழுதும் அவருடைய எதிர்ப்பு தீர்மானிக்கப்படுகிறது' என்பதன் மூலம் நியாயப்படுத்தலாம்.

இங்கு முக்கியமான இரண்டு பள்ளர் இனத்தலைவர்கள் உள்ளனர். புதிய தமிழகம் நிறுவனர் தலைவர் டாக்டர்.கிருஷ்ணசாமி மற்றும் தமிழக மக்கள் முன்னேற்றக்கழகத்தின் நிறுவனர் தலைவர் திரு.ஜான் பாண்டியன்.

தேவேந்திர குல வெள்ளாளர் சமுதாயத்தில் நன்கு அறிந்த தலைவர்கள்

பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு எதிராக போரிட்ட பூலித்தேவனின் துணைப்படைத்தலவரான வீரன் சுந்தரலிங்கம் நீங்கலாக இச்சமுதாயத் தலைவர்கள் குறித்து வரலாற்றில் அதிகம் பேசப்படவில்லை. மிகவும், அண்மையில், இம்மானுவேல் சேகரன், 1957–ல் அவரது மறைவுக்குப் பின்னர் இச்சமுதாயத்தின் புகழ்மிக்க உருவமாக, உருவகப்படுத்தப்பட்டு வருகிறது.

இம்மானுவேல் சேகரன்

முன்னாள் படைவீரரான இம்மானுவேல் சேகரனின் தாயார் வீராம்பாள் முதுகுளத்தூர் வட்டத்தையும் தந்தையார் பரமக்குடி வட்டம் செல்லூரையும் சேர்ந்தவர்கள் ஆவர். பரமக்குடியில் வசித்து வந்த இம்மானுவேல் சேகரன், தீண்டாமைக்கு எதிராக பல்வேறு வடிவங்களில் தனது எதிர்ப்பை தெரிவித்தார். இது அவரை பிரசித்திப்பெற்ற தலைவராக உருவாக்கியது.

ராமநாதபுரம் மாவட்டத்தில் 1957ஆம் ஆண்டு ஜூலை மற்றும் செப்டம்பர் திங்களுக்கிடையேயான கால அளவில், அரசியல் நோக்குடன் கலவரம் வெடித்தது. இது, தலித்/காங்கிரஸ் பிரதிநிதிக்குழுவின் தலைவர் இம்மானுவேல் சேகரன் படுகொலையினால் ஏற்பட்ட பின்விளைவாகும். இதன் விளைவாக, செப்டம்பர் திங்கள் 13 ஆம் நாளில், 5 தலித்களும், 3 தேவர்களும் மரணம் அடைந்தனர். செப்டம்பர் திங்கள் 14 ஆம் நாள்

காவல்துறையினர் நடத்திய துப்பாக்கிச்சூடு ஐந்து தேவர் இனத்தவர் இறப்பதற்கு வழிவகுத்ததோடு, இருபிரிவினரிடையே கலவரம் ஏற்பட்டு, 60 தலித் இனத்தவர் மரணமடைவதற்கு காரணமாக அமைந்தது. செப்டம்பர் திங்கள் 21–ஆம் நாள் வரையில் இத்தகைய சம்பவங்கள் தொடர்ந்தன. அதன்பின்னர் அலுவல் முறைப்படி எந்தவொரு சம்பவமும் தெரிவிக்கப்படவில்லை. முத்துராமலிங்கத் தேவர், 28.9.1957 அன்று இக்கலவரம் தொடர்பாக குற்றம்சாட்ட மாநில கூட்டத்தில் பேசிமுடித்த பின்னர் உடனடியாக கைது செய்யப்பட்டார். விசாரணை காலஅளவு நீட்டிக்கப்பட்ட பின்னர், 1959 ஜனவரியில் அவர் வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டார்.

யாதவர்கள் அல்லது கோனார்

இப்பகுதியில் மூன்றாவதாக அதிகம் காணப்படுவது இச்சமுதாய இனமக்கள் ஆவர். இவர்களில் பெரும்பாலனவர்கள் கால்நடை மந்தை மேய்த்து பேணுபவர்களாக இருந்தனர். இவர்களில் பெரும்பாலனவர் இன்னும் இத்தொழிலிலேயே ஈடுபட்டுவருவதுடன், மேய்ச்சல் பகுதிகளைத் தேடி தஞ்சாவூர் வரையிலும் குடிபெயர்ந்துள்ளனர்.

தற்போதைய நிலையில் பெரும்பாலானோர் விவசாயத் தொழிலுக்கு மாறியுள்ளனர். இயற்கையாகவே இந்தச் சமூகத்தினர் அரிதாகவே வன்முறையில் ஈடுபடும் தன்மையினர். ஆனால் சில இடர்பாடான சமயங்களில் மறவர்களுக்கு எதிராக ஈடுபடும் தலித்துக்களுடன் இணைந்து செயல்படுகின்றனர்.

மிக அண்மைக்காலத்தில்தான் விடுதலைப்போராட்ட வீரரான அழகுமுத்துக்கோன் என்பவரைத் தங்களது சமூகத்தின் உருவமாகச் சித்தரித்து வருகின்றனர்.

முகமதியர்கள்

இராமநாதபுரம் மாவட்டத்தின் பிற பகுதிகளைவிடப் பரமக்குடி வருவாய்க் கோட்டத்தில் குறைந்த எண்ணிக்கையிலான முகமதியர் சமூகத்தினரே உள்ளனர். பரமக்குடி அருகில் உள்ள எமனேஸ்வரம், முதுகுளத்தூர், அபிராமம் மற்றும் ஏர்வாடி ஆகிய ஊர்கள் குறைந்த எண்ணிக்கையிலான முகமதியர்களைக் கொண்டவை. அண்மையில் மதரீதியில் ஏற்பட்டுள்ள எழுச்சியைக் கருத்தில்கொண்டு, இவ்விடங்களையெல்லாம் குறிப்பாக டிசம்பர் 6 முதல் பிப்ரவரி 12ஆம் நாள் வரையிலான காலகட்டத்தை விழிப்போடு கண்காணிக்க வேண்டிய தேவையுள்ளது.

பிற சமூகத்தினர்

இவர்களையல்லாமல், பணிபுரியும் நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த பிள்ளைமார் சமூகத்தினர், வணிகம் மேற்கொள்ளும் செட்டியார் சமூகத்தினர் மற்றும் பரமகுடிக்கே உரித்தான தறி நெய்யும் சௌராஷ்டிரா வகுப்பினர்களும் பரமக்குடி வருவாய் கோட்டத்தில் அடங்கியுள்ளனர்.

பகுதி 2

இயல் 3

இராமநாதபுரம் மாவட்டமும் தற்போதைய சிக்கல்கள்

1985ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த மாவட்டமாக இருந்த இராமநாதபுரம் மாவட்டம் மூன்று மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டது. இதன் வழி முன்னர் இருந்த இராமநாதபுரம் மாவட்டத்துடன் கூட பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் திருமகன் மாவட்டம்(பின்னர் சிவகங்கை மாவட்டம் எனப்பெயர் மாற்றப்பட்டது), காமராசர் மாவட்டம் (பின்னர் விருதுநகர் மாவட்டம் எனப்பெயர் மாற்றப்பட்டது) என இரு மாவட்டங்கள் உருவாயின, (1996–1997க்கு இடைப்பட்ட காலகட்டத்தில் விலக்கிக்கொள்ளப்பட்ட தலைவர்களின் பெயர்கள் மாவட்டங்களின் பெயர்களோடும் போக்குவரத்துக் கழகங்களின் பெயர்களோடும் சேர்க்கக்கோரிப் பல்வேறு விதமான போராட்டங்கள் நடத்தப்பட்டு தொடக்கத்தில் அவ்வாறு சேர்க்கப்பட்டாலும் பின்னாளில் அத்தகைய மாறுதல்கள் விலக்கிக்கொள்ளப்பட்டன.

இராமநாதபுரம் மாவட்டத்தின் தற்போதைய தலைமையகம் நாட்டின் கிழக்குக் கடற்கரைப் பகுதியில் அமைந்துள்ளது.

இந்த மாவட்டம் தொலைத் தொடர்புப் பற்றாக்குறை, அமைப்பியல் ரீதியிலான குறைபாடுகள் மற்றும் ஆண்டு முழுவதும் நீர்ப்பற்றாக்குறை போன்ற பல காரணிகளால் பாதிக்கப்பட்டுள்ளது.

திருவாடானை, இராமநாதபுரம் மற்றும் முதுகுளத்தூர் போன்ற கடற்கரையை ஒட்டிய பகுதிகள் நெல் சாகுபடி செய்வதற்கேற்ற சாம்பல் அல்லது வெளிர் பழுப்புநிற வண்டல் மண் நிலத்தைக் கொண்டுள்ளன. இராமேஸ்வரம் மற்றும் கடற்கரைப் பகுதிகளில் மணற்குன்றுகள் பரவியுள்ளன. மணற்குன்றுகளில் பயிர்கள் விளையா.

இந்த மாவட்டத்தில் நிலத்தடி நீர் குறைவு. எனவே, இம்மாவட்டத்தின் முக்கிய பயிர்களாகப் பருத்தி, தானியப்பயிர்கள், நிலக்கடலை போன்றவை உள்ளன.

ஒட்டுமொத்தமாகப் பார்க்கையில் இராமநாதபுரம் மாவட்டம் வறட்சிமிகு மாவட்டமாக உள்ளது. கடற்கரைப் பகுதியில் உள்ள சில இடங்கள் கடற்காற்றால் ஓரளவிற்குப் பாதிப்பிலிருந்து தப்பியுள்ளன. (ஆதாரம்: இராமநாதபுரம் கெசட்டர்)

தொழிலகங்களை ஏற்படுத்தியிருந்தால் அங்கு வசிக்கும் மக்களின் மனோநிலையிலும் அடிப்படைக் குணாதிசயங்களிலும் மாற்றங்கள் ஏற்பட்டிருக்கக் கூடும். பொருளாதாரத்தில் வளமையாக வளர்ந்து வரும் பகுதி சமூக அல்லது வன்முறை ரீதியிலான சம்பவங்களை நடக்கவிடாமல் காத்துக்கொள்ளும். அன்றியும், சில நேரங்களில் பதட்டமான சூழல் ஏற்பட்டாலும் அதனை நெடுநாள் நீடிக்கவிடாது. மழை பற்றாக்குறையால் இப்பகுதி

வறட்சியாகவும் இங்கு வாழும் மக்கள் பொருளாதாரத்தில் வளம் குன்றியவர்களாகவும் உள்ளனர்.

பரமக்குடி பகுதிக்கு முக்கிய நீர் மூலமாக அமைந்திருப்பது வைகை ஆறாகும். கமுதி, முதுகுளத்தூர் மற்றும் கடலாடிப் பகுதிகளில் உள்ள விவசாய நிலங்கள் பிற இணை ஆறுகளிலிருந்து அரிதாகவே நீரைப் பெறுவனவாக உள்ளன. மேலும் மேற்படி பகுதிகளில் உள்ள குளங்களுக்கு நீரைக் கொண்டு செல்லும் ரகுநாத காவிரி மற்றும் நாராயண காவிரி போன்ற கால்வாய்களும் வற்றியுள்ளன. இத்தகைய சூழ்நிலையில், இப்பகுதியின் முக்கியமான தொழிலாக விளங்கும் விவசாயம், குறைவான மழையை நம்பியே உள்ளது. எனவே, வடகிழக்கு பருவமழையின் போதும் அதைத் தொடர்ந்து சில மாதங்களுக்கு மட்டுமே இங்குள்ள மக்கள் வேலைச் சுமை உள்ளவர்களாக உள்ளனர். விவசாயத்தில் முழுமையாக மக்கள் ஈடுபட்டிருக்கும் காலக்கட்டத்தில் குற்றங்களின் எண்ணிக்கை குறைவாகவும், குறைந்த எண்ணிக்கையிலான சட்டம்–ஒழுங்கு பிரச்சனைகளும் ஏற்பட்டுள்ளன. நவம்பர்–டிசம்பர் மற்றும் மார்ச்–ஏப்ரல் ஆகிய காலக்கட்டங்களில் இப்பகுதி மிக அமைதியாகவே உள்ளது.

ஜூலிஃப்ளோரா புரோஸாஃபிஸ் (காட்டுக்கருவேல் அல்லது சீமக்கருவேல்) என்னும் முள்தாவரத்தின் அபரிமிதமான வளர்ச்சியும் இப்பகுதியின் சட்டம்–ஒழுங்கு பிரச்சனையில் பங்கு வகிப்பது ஆச்சர்யம் தரும் விஷயமாக உள்ளது. காட்டுக்கருவேல் மரங்கள் சுற்றியுள்ள நீராதாரத்தை உறிஞ்சி மற்ற தாவரங்கள் வளர்வதைத் தடுப்பது ஆதாரப்பூர்வமாக நிரூபிக்கப்பட்டுள்ளது. முழுமையாக வளர்ந்த மரங்களை ஏலம் விட்டு அதனால் கிடைக்கும் பெரும்பாலான வருமானத்தை அப்பகுதியில் அமைந்திருக்கும் காக்கும் கடவுள்களின் கோயில்களைக் கட்டும் பணிக்காக செலவிடும் வழக்கம் பல்லாண்டு காலமாக இப்பகுதி மக்களிடையே நிலவி வருகிறது. ஆனால், தற்போதைய நிலையில், இந்த ஏல வருமானத்தில் பெரும் பகுதி சாதிக் கலவர வழக்குகளுக்காகவே செலவிடப்படுகிறது. வருவாய் கோட்ட அலுவலர்கள் இதனை கருத்தில் கவனமாகக் கொண்டு செயல்பட்டு, குறிப்பாக கமுதி மற்றும் முதுகுளத்தூர் பகுதிகளில் உள்ள பெரிய மற்றும் சிறிய குளங்களில் வளர்ந்திருக்கும் காட்டுக்கருவேல் மரங்களை அவ்வப்போது ஆய்வு செய்து அவற்றை ஏலமிடுவதற்கு உரிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

ஒட்டுமொத்தமாகக் கூறவேண்டுமெனில், இப்பகுதிகளில் வாழும் பெரும்பான்மையான சமூகத்தவர்களிடையே காணப்படும் தொழில் புரிவதற்கு ஏற்ற ஈடுபாட்டுக் குறைவே சாதிப் பதற்றத்திற்கு முக்கிய காரணமாக அமைந்துள்ளது. முன்னரே குறிப்பிட்டது போல், மற்ற இடங்களில் நடக்கும் இருபோக சாகுபடியன்றி இப்பகுதிகளில் ஒருபோக சாகுபடியே மேற்கொள்ளப்படுகிறது. இதனால் விவசாயிகள் அறுவடைக்குப் பின் வேலையின்றி சோம்பலாக இருக்கும் சூழல் உள்ளது. "சோம்பேறியின் உள்ளம் பிசாசின் கூடாரம்" என்னும்

பொதுமொழி இம்மக்கள் விஷயத்தில் ஒத்துப்போவதாகவே உள்ளது. இவ்வாறு சோம்பேறிகளாக உள்ளவர்கள் சட்டத்திற்கு புறம்பான அல்லது சட்டத்தைக் கையில் எடுத்துக்கொள்ளும் செயல்பாடுகளில் ஈடுபடுகின்றனர். தென் தமிழகத்தில், குறிப்பாக இராமநாதபுரம் மாவட்டத்தில் சாதி அடையாளப்படுத்தல் மிக ஆழமாக மனங்களில் ஊடுருவி உள்ளது. பள்ளி மாணவர்கள் தங்கள் சாதியைக் குறிக்கும் வண்ணப்பட்டைகளை மணிக்கட்டுப் பகுதியில் கட்டியிருக்கின்றனர்.

1957–ஆம் ஆண்டு தொடங்கி தேவர் மற்றும் தலித் சாதியினரிடையே சாதி மோதல்கள் தொடர்ந்து அடிக்கடி நடந்து வருகின்றன. தேவர் மற்றும் தலித் தலைவர்களின் விழாக்கள் செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாதங்களில் நடைபெறும் நாட்களில் தென் தமிழக பொதுமக்கள் மிகுந்த பதட்டத்தோடும், பயத்தோடும் வாழும் சூழ்நிலையே உள்ளது.

1991–ஆம் ஆண்டு கீழத்தூவல் என்ற இடத்தில் ஆத்திரமூட்டும் வகையில் பேசியதால் ஜான் பாண்டியன் மீது கல்லெறிந்த சம்பவம் நடந்தது. இதன் விளைவாக, ஐந்து இடங்களில் சாலை மறியல் போராட்டம் நடந்தது.

1996–ஆம் ஆண்டில் பரமக்குடி பகுதியில் ஏற்பட்ட சாதி மோதலால் மூன்று பேர் இறந்தனர். தேவேந்திர குல வேளாளர் சங்கம் நடத்திய ஊர்வலம் மற்றும் கடை அடைப்பின் விளைவாகவே மேற்படி சம்பவம் நடந்தது. இதுகுறித்து வழக்கும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மீண்டும் 1997–ஆம் ஆண்டில் விருதுநகர் மாவட்டத்தில் நிகழ்ந்த சாதி மோதலைத் தொடர்ந்து ஐந்து இடங்களில் சாலை மறியல் ஏற்பட்டது. காவல் துறையினர் சிலரை கைது செய்தனர். கைதானவர்களை ஏற்றிச் சென்ற வாகனம் காட்டுப்பரமக்குடி என்ற இடத்தில் தாக்கப்பட்டது. பெட்ரோல் குண்டுவீச்சைத் தொடர்ந்து நடந்த காவல்துறை துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் இறந்தார்.

1998–ஆம் ஆண்டில் சண்முகபாண்டியன் இராமநாதபுரத்திற்கு வருகை புரிந்தார். இதனைத் தொடர்ந்து சத்திரக்குடி என்ற இடத்தில் தேவர்களுக்கும் தலித்களுக்கும் இடையே சாதி மோதல் ஏற்பட்டது. இதன் தொடர் விளைவாக, இராமநாதபுரம் நகரப் பகுதிகளில் ரகளையும் கொள்ளையடிப்புச் சம்பவங்களும் நடந்தன.

இத்தகைய சாதி மோதல் சம்பவங்களை கட்டுப்படுத்தும் செயல்பாடுகள் மாவட்ட நிர்வாகத்திற்கு கடும் சோர்வைத் தரும் பணியாகவே எப்போதும் இருந்து வருகின்றன.

பகுதி II

இயல் 4

சிலைகள் நிறுவுதல், பிறந்தநாட்களைக் கொண்டாடுதல் மற்றும் நினைவுகூறும் நாட்களைப் பற்றி

பொது இடங்களில் சிலைகளை நிறுவுதல் குறித்து 1990–களின் பிற்பகுதியில் வெளியிடப்பட்ட ஆணையில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த ஆணையில் தனியான நடைமுறைகள் பற்றி கூறப்பட்டுள்ளது. சிலை தயாரிப்பில் பயன்படுத்தப்படும் பொருள்கள் (வெண்கலம்) பற்றியும், சிலைப் பாதுகாப்பு, சிலை அமைப்பில் ஈடுபடும் மக்களின் முயற்சிகள் குறித்தும் அதில் சுட்டப்பட்டுள்ளன.

அண்மையில் உச்ச நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட குறிப்புரையில் பொது இடங்களில் சிலை நிறுவுதல் பற்றி பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது:

> "பொதுமக்கள் நலன் முதன்மையாகக் கருத்தில் கொள்ளப்பட வேண்டும். பொது வழிப்பாதை யாருடைய சொத்தும் அன்று, நாட்டின் ஒவ்வொரு குடிமகனுக்கும் சாலையில் சுதந்திரமாகச் செல்ல உரிமையுண்டு. இந்த உரிமையை மீறும் வகையில் சாலைகளில் சிலைகள், கோயில்கள், மசூதிகள், தேவாலயங்கள் போன்றவற்றை ஏற்படுத்தக்கூடாது. இவ்வகையான செயல்பாடுகள் களையப்படவேண்டும். தலைவர்களைப் போற்றிப் புகழ்வதைவிட, நீதியைப் பயன்படுத்தி ஏழைகளின் வாழ்வில் எற்றம் காணச் செய்தால் என்ன? பொது மக்களின் நலனுக்கான நிதியை அவர்களுக்கே செலவிட்டால் என்ன?"

பெரும்பாலான பிரதிவாதிகள் மேற்குறித்த சிந்தனைகளையே எதிரொலித்துள்ளனர். மேலும், பல ஆக்கப்பூர்வமான பரிந்துரைகளையும் அவர்கள் வழங்கியுள்ளனர்.

- பொது இடங்களில் கட்சி சார்புடன் அடையாளப்படுத்திக் கொள்ளும் சாதி மற்றும் சமூகத் தலைவர்களின் சிலைகளை வைப்பது தவறான நடைமுறையாகும்; இது தவிர்க்கப்படவேண்டும்.
- எந்தவொரு தனிமனிதனும், தான் நினைத்த இடத்தில் எந்தவொரு மனிதனின் சிலையையும் நிறுவ இயலும் என்ற செயல்பாடு மாற்றப்படவேண்டும். தமிழகத்தில் நிலவும் சாதி மோதல்களின் பின்னணியில் சிலைகளை நிறுவுதல் முக்கியக் காரணமாக அமைகிறது.

- சாதித்தலைவர்களின் பெயர்களைப் போக்குவரத்துக் கழகங்களுக்குச் சூட்டுவதும், மாவட்டங்களுக்கு அவர்களின் பெயர்களைச் சூட்டுவதும், சிலைகளை நிறுவுதலும் ஆகிய செயல்பாடுகள் நீக்கப்படவேண்டும்.

- பொது இடங்களில் நிறுவப்பட்டுள்ள அனைத்துச் சிலைகளும் சாதி, மத மற்றும் இனப்பாகுபாடின்றி நீக்கப்படவேண்டும். ஏனெனில் அரசியல் தலைவரின் சிலை உடைப்பால் சமூகத்தில் நிலவி வரும் பொது அமைதி கெடுகிறது. எனினும் மதிப்பிற்குரிய தலைவர்களின் சிலைகளை நிறுவியே ஆக வேண்டுமெனில் அவற்றைச் சாலைகள், பூங்காக்கள் போன்ற பொதுவிடங்களில் அமைக்காமல் தனி வளாகத்திலோ, அவர் சார்ந்திருக்கும் அமைப்பின் பகுதியிலோ அமைக்கலாம்.

- பொது இடங்களில் தேவைற்ற சிலைகளை நிறுவுதல் தடுக்கப்படவேண்டும். சிலை நிறுவுதல் பற்றி அரசு கொள்கை முடிவு எடுக்க வேண்டும்; தேவைப்படின் புதிய சட்டம் இயற்றலாம்.

- சாதி/மதத் தலைவர்களின் ஆண்டு நிறைவு நாள்/நினைவு நாள் விழாக்களுக்கு அலுவலக அனுமதி வழங்கக் கூடாது. அரசு நேரடியாக ஆதரவு கொடுத்தல் அல்லது விழாக்களில் பங்கெடுத்தல் என்பது சமூக ஒற்றுமையைப் பாதிப்பதோடு ஒவ்வொரு பிரிவினரும் இதே மாதிரிச் செயல்படுவதற்கு வித்திடுவதாக அமையும்.

- சாதி/இனத்தலைவர்களின் ஆண்டு நிறைவு நாள் கொண்டாட்டம் / நினைவு கூறும் நாட்களைக் கொண்டாடுதல் என்ற போர்வையில் மறைமுகமாகச் சாதி / இனத் தூண்டல்கள் நடைபெறுவதைத் தடை செய்ய வேண்டும்.

ஒவ்வோர் ஆண்டும் பெரும் தொகையிலான நிதியும் ஆற்றலும் மண்டலப் பகுதித் தலைவர்களின் பிறந்த நாள் அல்லது நினைவு கூறும் நாளின்போது பாதுகாப்பிற்காகவும், அமைதியை ஏற்படுத்துவதற்காகவும் செலவிடப்படுகிறது. இத்தகைய விழாக்கள் அந்தத் தலைவர்கள் செய்த சமூகப் பங்களிப்பை நினைவு கூறும் வகையில் அமையாமல் வன்முறைக்கும், இரத்த வடிதலுக்கும் காரணமாக அமைகின்றன. நிர்வாகம் தன்னால் இயன்ற அனைத்து முயற்சிகளையும் பயன்படுத்த வேண்டிய நிலை உள்ளது. காவல் துறை மற்றும் துணை இராணுவப் படையினர்களை ஈடுபடுத்தி, அமைதியை ஏற்படுத்த அனைத்து வழிமுறைகளையும் கையாள வேண்டும். இவ்விழாக்கள் கலகம் மற்றும் கிளர்ச்சி எவையுமின்றி நிறைவடைந்தால் அது நிர்வாகத்தினருக்கு நிம்மதியளிக்கும் செயல்பாடாக அமையும். குருபூஜை மற்றும் நினைவு தின நிகழ்ச்சிகளுக்காக மாவட்ட நிர்வாகமானது பரந்த அளவில் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யத் திட்டமிட்டிருந்தது.

1. மிக முக்கிய வேலையை புறக்கணித்துவிட்டு 25 மேல் மட்ட காவல் அதிகாரிகள், ஐம்பதிற்கும் மேற்பட்ட துணைக் காவல் கண்காணிப்பாளர் என்ற அளவிலும், நூற்றுக்கணக்கானத் தலைமைக் காவலர்கள் மற்றும் பிற மாவட்டங்களிலிருந்தும் காவலர்களைப் பணியில் ஈடுபடுத்தி குருபூஜையையும் (அல்லது) நினைவு தின நிகழ்ச்சிகளையும், வேட்டங்களையும் கண்காணிக்கச் செய்தனர்.

2. கூட்ட இடங்களில் பணியில் அமர்த்தப்பட்ட காவலர்கள் தங்குவதற்கும், உணவுச் செலவினத்திற்காகவும் அதிகமாகச் செலவிடப்பட்டது.

3. ஊர்வலம் செல்லும் பாதைகளில் உள்ள கடைகளையெல்லாம் மூடி அவர்களில் தொழில் முடங்கியது.

4. பாதையைத் திருப்பிவிட்ட காரணத்தால் வெளியூர் பயணிகள் மிகவும் பயங்கர அவதிக்குள்ளாகினர்.

5. அமைதிக்குழுக்கூட்டம் மற்றும் ஆயத்தக் கூட்டங்கள் நடத்துவதில் பொன்னான நேரங்கள் வீணாகி வானாய நிர்வாகக் கடமைகளெல்லாம் நிறுத்தி வைக்க நேர்ந்தது.

6. ஏதாவது முறை தவறிய நடவடிக்கைகளினால் அரசு வாகனங்களைச் சேதப்படுத்துவதோ மற்ற அரசுச் சொத்துக்களைச் சேதப்படுத்தியிருந்தாலோ அங்கே பொதுச் சொத்து வீணாக்கப்படுகிறது.

7. இதுபோன்ற நிகழ்வுகளின் போது அதிக சுமையுள்ள வாகனங்களில் கூட்ட நெரிசல்கட்டுப்படுத்த முடியாமல் அங்கே சாலை விதிகள் புறக்கணிக்கப்பட்டு காவலர்கள் ஏதும் செய்ய இயலாத நிலை எற்படுகிறது.

8. டாஸ்மாக் மதுபானக் கடைகள் மூடப்பட்ட காரணத்தால் அரசுக்கு இழப்பு நேரிட்டு முறைகேடாக விற்கப்படும் மதுபானங்கள் வளம் பெறும்.

9. இராமநாதபுர மாவட்டத்தில் கடந்த காலங்களில் குருபூஜையின் போது உருவாக்கப்பட்ட பிரச்சனைகளால் எந்த அலுவலரும் அங்கே பணியாற்ற முன்வரவில்லை.

10. எந்த அரசியல் தலைவர்களும் இந்தப் பிரச்சனையால் பாதிக்கப்படவில்லை. ஏழை ஆதரவாளர்கள் மட்டுமே பாதிக்கப்பட்டனர்.

தடைவிதித்தால் மேற்கண்ட அனைத்து பிரச்சனைகளையும் நீக்கிவிடலாம். ஒருவேளை அது முடியாத காரியமென்றால், கூட்டம் கூடுவதற்கு கட்டுப்பாடு விதிக்க வேண்டுவது அடுத்த வழிமுறையாகும். மாவட்டம் முழுமையும் கூட்டம் கூட தடை விதித்தல் என்பது நீடித்தாலோ அல்லது இதுபோல நிகழ்வுகளுக்கு தடைவிதித்தாலோ பிரச்சனைகளை கட்டுப்படுத்தலாம்.

பகுதி – II

இயல் 5

மாவட்ட நிர்வாகம் செய்ய வேண்டியவை அல்லது செய்து கொண்டிருக்கும்/ மேற்கொண்டு வரும் பணிகளில் தவிர்க்க வேண்டியவை .(refrain)

மாவட்ட நிர்வாகம் முக்கிய இன்றியமையாதத் தலைமைப் பொறுப்பு மற்றும் ஒருங்கிணைப்புப் (co-ordination) பணிகளை உடையது. இது காவல்துறை செய்து முடிக்கும் பணிகளுக்கு வலுவூட்டுகிறது. இத்துறை வெளிச் சூழ்நிலைகளை திறம்படக் கையாண்டு காவல்துறையினர் செய்ய வேண்டியப் பணிகளுக்கு வழிவகுக்கிறது.

மாவட்ட நிர்வாகம் காவல்படையினருக்குத் தெளிவான(brief) முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை அளிக்க வேண்டும் (காவல் படையினரின் தேவைகளை / எதிர்பார்ப்புகளுக்கு (expectation) ஏற்ப குறிப்புரை அளித்திருக்க வேண்டும். மேலும், நடவடிக்கை எடுத்தபின் பின்வாங்கக்கூடாது.

காவல் துறையினர் எடுக்கும் அதிகப்படியான(excess) நடவடிக்கைகளுக்கு எழும் விமர்சனங்களை (criticize) பொருட்படுத்தக்கூடாது. காவல் துறைனரின் செயல்பாடுகளுக்கு ஒருபுறம் பாராட்டும் மற்றொருபுறம் விமர்சனம் எழும் பட்சத்திலே சிக்கல்கள் எழுகின்றன. இச்சூழலில் காவல்துறையினர் பாரபட்சம் பார்க்காமல் நடுநிலையாக உள்ளனர் என்று கருதப்படுகிறது.

நம்நாடு போன்ற குடியரசு நாட்டில் (democratic country) மாவட்ட நிர்வாகம் அதிகக் கெடுபிடியாக (too restrictive) இருக்க முடியாது அல்லது நடவடிக்கைகளுக்கு / செயல்பாடுகளுக்குத் தேவையற்ற தடை உத்தரவினை பிறப்பிக்க கூடாது. ஆனால் கோபமூட்டும் சொற்கள் மற்றும் பேச்சுகளை தவிர்க்க வேண்டும். தேவையற்ற தடை மோசமான சூழ்நிலை உருவாக்கும் /கெடுபிடியை உண்டாக்கும். எனவே சூழ்நிலைக்கு ஏற்றவாறு மாவட்ட நிர்வாகம் தடை உத்தரவை பிறப்பிக்கவோ அல்லது பிறப்பிக்காமலோ இருக்க மாவட்ட நிர்வாகம் ஒரு தீர்வினை காண வேண்டும்.

காவல்துறை அதிகாரிகள் தங்களுக்கு மேல் பணியாற்றும் அதிகாரிகளை கேட்டு நடவடிக்கைகளை எடுப்பது போல் அல்லாமல், மாவட்ட ஆட்சியர் நேரடியாக முடிவுகளை எடுக்கலாம். மாவட்ட நிர்வாகம் வெவ்வேறு சூழ்நிலைகளை சமாளிக்க இம்மாதிரி வழிமுறையை சாதுர்யமாக பயன்படுத்த பரிந்துரைக்கலாம் / ஆலோசனை கூறலாம்.

வெவ்வேறு மாவட்டங்களில் நிகழும் முக்கிய நிகழ்வுகளை எதிர்நோக்கும்பொழுது பொதுத்துறை செயலாளர் அல்லது உள்துறை செயலாளர் அல்லது வருவாய் நிர்வாக ஆணையர் ஆகியோர் காவல்துறையினருடன் ஒத்து செயல்பட அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இம்மாதிரி பெரிய நிகழ்வுகளை / சிக்கல்களை சமாளிக்க வெவ்வேறு மாவட்டங்களும் ஒத்துழைக்க வேண்டும். மாவட்ட நிர்வாகத்தினருக்கு எவ்வித தடையுமின்றி தனிப்பட்ட தகவல்களை பரிமாற்ற வேண்டியது அவசியமாகிறது. காவல்துறையினரிடமிருந்து பெறும் நுட்பமானத் தகவல்களை மட்டுமே சார்ந்திருப்பது நல்லதல்ல / சரியானதல்ல அமைதியான சூழ்நிலை ஏற்படும்போது பல இடங்களுக்கு சென்று பொதுமக்களிடமிருந்து தனி நபர்களின் கருத்துக்களையும் சேகரிக்கலாம். சில நேரங்களில் காவல்துறையினரின் அறிவுக் கூர்மையான / திறமையான வலை அமைப்பின் மூலம் சேகரிக்கப்படும் தகவல்களை விட உள்ளூர் கிராம வாசிகள் மூலம் நேரடியாக தகவல்கள் விரைவாக வந்தடைவதும் உண்டு. சட்டம் மற்றும் ஒழுங்கு, பொது மக்கள் ஆதரவு, அணுகுமுறை / அணுகும் தன்மை, வெளிப்படையான தன்மை, தடையற்ற தகவல் பரிமாற்றம் போன்றவற்றுடன் திறமையாக ஒருங்கிணைத்தல் மற்றும் தகவல் சேகரித்தலை தீவிரமாக்குதல் ஆகியவையும் மிகவும் முக்கியமானவை ஆகும்.

இம்மாதிரி விஷியங்களில் காவல்துறையினருக்கும் வருவாய் துறையினருக்கும் இடையே ஒருங்கிணைப்பு மிகவும் முக்கியமானதாகும்.

ஒரு நிகழ்ச்சி நடைபெறுவதற்கு குறைந்த பட்சம் ஒரு மாதத்திற்கு முன்னதாக மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையிலான துறை சார் உயர் அதிகாரிகள் மற்றும் காவல் துறை உயர் அதிகாரிளை உள்ளிட்ட உயர் மட்ட அதிகாரிகள் குழு ஒன்றை உருவாக்கி சூழ்நிலையைப் பார்வையிட வேண்டும். இம்மாதிரி மேற்பார்வையிடும் குழுவில் உள்துறை செயலாளர் மற்றும் காவல்துறைத் தலைவர் ஆகியோரும் இடம் பெறலாம்.

இம்மாதிரி நிகழ்வு ஒவ்வொரு ஆண்டும் நிகழ்வதெனில் பிரச்சனைக்கான அடிப்படையினை கண்டறிந்து நீதித்துறை அதிகாரிகள் அல்லது நீதி அமல்படுத்தும் அதிகாரிகள் தீர்வு குறித்து ஆய்வு செய்ய வேண்டும்.

அமைதி காக்கும் குழுக்கள் (Peace Committees)

சாதி சார்ந்த நிகழ்விற்காக கூட்டமாக ஒன்று கூடும்போது ஏற்படும் பிரச்சனைகளை சமாளிக்க காவல்துறை மற்றும் உள்துறை அதிகாரிகள், சாதித்தலைவர்கள் மற்றும் பல்வேறுபட்ட பொதுமக்களின் ஆதரவு பெற்றவர்களின் கருத்தினை சேகரித்திருப்பவர்களை கொண்டு முன்கூட்டியே அமைதி கூட்டம் நடத்தி அவர்களின் உதவியையும் ஆதரவையும் பிரச்சனை ஏற்படும்போது கோரப்படும் என்று தெரிவிக்கலாம். அவர்களுடைய சமூகத்தினரிடையே அமைதியை நிலவச் செய்ய வேண்டியது அவர்களுடைய கடமை என்ற உணர்வினை ஏற்படுத்தவேண்டும். சீரான கால கட்ட இடைவெளிகளில் தொடர்ந்து அமைதி காப்பதற்கான குழுக் கூட்டங்களை நடத்த வேண்டும்.

கூட்டம் நடைபெறும் போது கலவரத்தை / வன்முறையை ஏற்படுத்தக்கூடிய வாய்ப்புகளை குறைக்க அல்லது மட்டுப்படுத்த தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள அதிகாரிகளுடன் விரிவாக விவாதிக்க வேண்டும்.

வெவ்வேறு இன குழுக்களுக்கிடையேயான மோதல்களுக்கான / இறுக்கமான சூழ்நிலைகளுக்கான காரணங்களை களைந்து நல்லுறவினை நீடிக்க செய்யவேண்டியது காவல் துறையினர், மாவட்ட ஆட்சியர், மாவட்ட வருவாய் அலுவலர், துணை ஆட்சியர் / வருவாய் கோட்டாச்சியர் போன்ற மாவட்ட அதிகாரிகளின் முக்கியப் பணி மற்றும் பொறுப்பு ஆகும். இவர்கள் தனித்தோ கூட்டமைப்பாகவோ இயன்ற முன்னேற்பாடுகளை செய்து அசம்பாவிதங்கள் நிகழாமல் பாதுகாப்பதோடு, அவ்வாறு நிகழ்ந்துவிட்டால் அதனை உடனடியாக குறுகிய காலத்தில் செயல்பட்டு நிலைமையை கட்டுக்குள் கொண்டுவர வேண்டும்.

அசம்பாவிதம் / கலவரம் நடைபெறும் குறிப்பிட்ட பகுதிகளில் பணிபுரியும் பொதுமக்களுடன் நல்லலுறவு கொண்ட அரசு ஊழியர்களைக் கொண்டு கலவரத்தைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்கலாம். மாவட்ட ஆட்சித்தலைவர்கள் அவர்கள் இவ்வாறான அரசு ஊழியர்களை இனங்கண்டு அவர்களை இம்மாதிரி நிலைமைகளை கட்டுக்குள் கொண்டுவர பயன்படுத்திக்கொள்ளலாம். நிலைமையை கட்டுக்குள் கொண்டுவர ஒரு நிர்வாக நடுவரை தெரிவு செய்து அவர் காவல்துறையினர் பின்பற்றும் வழிமுறை மற்றும் அதை பிரயோகிக்க வேண்டிய நேரம் ஆகியவற்றை முடிவு செய்ய வேண்டும். அவர் இந்த சூழ்நிலையின் முழு பொறுப்பையும் ஏற்க வேண்டியது அவருடைய தலையாய கடமையாகும். அவர் சம்பவ இடத்தில் இருக்க வேண்டியது, காவல் துறை அதிகாரிகளின் உதவியுடன் முடிவு எடுக்க வேண்டியது ஆகியவை மிகவும் அவசியமாகும். மாவட்ட நிர்வாகம் முன்கூட்டியே தலைவர்களை சமாளிப்பது, கலவரக்காரர்களை எச்சரிப்பது, பொய்யான புரளிகளை/ வதந்திகளை புறக்கணிப்பது போன்றவற்றை செய்து மக்களிடையே அமைதி நிலவச் செய்ய வேண்டும்.

பகுதி –II

இயல் 6

காவல்துறையினரின் பங்கு – செய்ய வேண்டியவை (Do's) மற்றும் செய்ய வேண்டாதவை (Dont's)

1. இடையூறுகளுக்கான காரணங்கள்

* சாதி பிரமுகர்கள் / முக்கிய நபர்களின் சிலைகள் சாதித்தொடர்புடைய பொருள்கள், சின்னங்கள், கொடிகள், (கொடியை திருடுதல், வளைவுகளைச் சேதப்படுத்துதல், செருப்புகளால் ஆன மாலை அணிவித்தல், சாதி முக்கியஸ்தர்களின் சிலைகளின் மேல் கழிவுகளை வீசுதல்) போன்றவற்றிற்கு எதிரான விஷமங்கள்.
* சாதி பொருள்கள், முத்திரைகள் /சின்னங்கள், கொடிகள் போன்றவற்றிற்கு எதிரான தடை
* சாதி விழாக்கள் / பண்டிகைகள், ஊர்வலங்கள் போன்றவற்றில் குறுக்கீடு / தலையீடு.
* மதியாமை (பரவலாக மதிக்கத்தக்கவற்றை / மதிக்க கூடியவர்களை மதிக்காமை.)
* அதிகாரம் / ஆதிக்கப் பகுதிகளில் பிரச்சனையை தூண்டிவிடுதல்.
* சாதிக்கூட்ட சொற்பொழிவுகளில் அவதூறாக பேசுதல் (போடி, தேனி, மீனாட்சிபுரம் கலவரங்கள் –1989)
* பொற்றோர் ஒப்புதலின்றி நடைபெறும் கலப்பு திருமணங்கள்.
* பொது வசதிகளை பயன்படுத்தல் (கிணறு, நடைபாதை, பொது குடிநீர் குழாய், குளியல் இடம்)
* குடிமை தகராறுகள் (பணப்பரிமாற்றம், நில. தகராறு, புறம்போக்கு நிலங்களை பயன்படுத்துதல், நீர்ப்பாசனம், நடைபாதை போன்றவை)
* வியாபார போட்டி(மீன் விற்பனை, பேருந்து நிலைய பழ வியாபாரிகளுக்கான சண்டை)
* வியாபார விவகாரங்களில் முதலாளி / தொழிலாளி தகராறுகள் (உணவக முதலாளி வாடிக்கையாளர் சண்டை)
* தேர்தல் போட்டி (1957 செப்டம்பர் – முதுக்குளத்தூர் இடைத்தேர்தலுக்கான வாக்குப்பதிவின்போது ஏற்பட்ட கலவரம்.
* பெண்களை கேலிச்செய்தல் (1910–ல் இராமநாதபுரத்தில் நடைபெற்ற கலவரம்)
* குழந்தைகளுக்கிடையேயான சண்டை
* கவனக்குறைவான நடவடிக்கை / கேடு விளைவித்தல் (இந்து மத மோட்டார் சைக்கிள் வாகன ஓட்டி தலித் இன நபரை, பாதசாரியை சைக்கிள் ஓட்டுநர் மோதுதல், புத்தி சுவாதினமற்றவரிடம் போன்றவை)
* அற்பச்சண்டைகள்.
* சட்டவிரோத விவகாரங்கள்
* சட்டவிரோதமாக மது காய்ச்சுதல்.

* கண்காட்சி மற்றும் விழாக்களை நடத்துதல் (உஞ்ஜானை கலவரங்கள் 1979, சாத்தூர் மற்றும் ராஜபாளையம் கலவரங்கள் – 1990)

* அரசியல் விவகாரங்கள்

* சாதிக்கலவரப் பிரதிபலிப்பு (1995 மற்றும் 1997 தென் தமிழகத்தில் நடந்த சாதிக்கலவரங்கள்.

* மத நல்லிணக்கத்திற்கு ஊறு விளைவிக்கும் வகையில் தனிப்பட்ட நபர்களின் எழுத்து மற்றும் செயல்கள்

* ஒரு நிகழ்வு குறித்து சாதி உணர்வுடன் வெளியிடப்படும் செய்தி இதழ்களின் தவறான கண்ணோட்டம்

* வதந்திகளை பரப்புதல்

* கோவில் தேர் வடம் இழுப்பதில் எழும் தகராறு (1997–ல் கோவில்பட்டி கலவரம்)

* தனி நபர் பற்றிய தவறான விமர்சனம்.

* பிற காரணங்கள் (முன் பகை மற்றும் வெளிப்படையாக தெரியாத காரணம்)

2. மாவட்ட சிறப்புப் பிரிவு, உளவுத்துறையினர் மற்றும் உள்ளூர் காவலர்கள் நிலவக்கூடிய சூழ்நிலைகள் மற்றும் நிலவும் காரணிகள் இவற்றிற்கு ஏற்றவாறு சாதுர்யமாக நுட்பச் செய்திகளை சேகரிக்க வேண்டும்.

* "வெள்ளம் வரும்முன் அணைபோடவேண்டும் "என்ற பழமொழிக்கேற்ப கலவரம் ஏற்படுத்துபவர்களை பற்றிய விவரங்களை முன்பே சேகரிக்கவேண்டும்.

எந்த ஒரு சாதிக் கலவரமும் ஓர் இரவிற்குள் வெடித்து விடாது சிறு மற்றும் சிக்கலான பிரச்சனைகளை உளவுத்துறை பிரிவு முழுவதுமாக முடிக்கி விடப்பட்டு தினந்தோறும் சட்டம் ஒழுங்கு பிரச்சனைகளை ஏற்படுத்தக்கூடிய கவனிக்காமல் விடப்பட்ட விவரங்களை சேகரிக்க வேண்டும். வன்முறைக்கான காரணம் சாதாரணமாக இருந்து வலுவானதாகக் கூடும். நுட்பச் செய்திகளை சேகரிப்பது மந்தமானதும், வலி ஏற்படுத்துவதும் அதிக உழைப்பை உட்கொள்வதாகவும் இருக்கும். இருந்தாலும் தொடர்ந்து தினந்தோறும் காவல்நிலையம், மாவட்டம் மற்றும் மாநில அளவில் இதனை தொடர்ந்து செய்து கொண்டே இருக்க வேண்டும். நுட்பச்செய்திகளை சேகரிப்பதில் கீழ்கண்டவற்றை மேற்கொள்ள வேண்டும்.

- சாதிய அமைப்புகளின் செயல்பாடுகள்.
- கலவரம் ஏற்படக்கூடிய இடங்களில் சாதி அமைப்புகளின் நடவடிக்கைகளை கண்காணித்தல்.
- கலவர நேரங்களில் தலைதூக்கும் சமூக எதிர்ப்பாளர்களின் நடவடிக்கைகளை கண்காணித்தல்.
- சாதி சொற்பொழிவுகள்.

- கலவரமூட்டக்கூடிய சுவரொட்டி விளம்பரங்கள் சிறு வடிவ நூல்கள்.
- எழுத்து மூலம் இதழ்கள், நூல்கள் மற்றும் பிற வெளியீடுகள் இவற்றால் சாதி அமைப்புகள் கலவரமூட்டுதல்.
- நிலுவையில் உள்ள தகராறுகள், மனஇறுக்கம் மற்றும் கைது செய்தல், பொருளாதார எதிரிகள், குடிமை தகராறுகள் போன்றவை ஒரு சமூகத்திற்கோ அல்லது தனி நபருக்கோ சம்மந்தப்பட்டிருந்தாலும் அது ஒரு குழுவை உருவாக்கிவிடும்.
- சாதிசெயல்பாடுகளுக்கு நிதிஉதவி அளித்தல்.
- துப்பாக்கி மற்றும் வெடிமருந்து போன்ற ஆயுதங்களை சேகரித்தல்.
- அரசியல் ஆதாயத்திற்காக சாதிய உணர்வுகளை தூண்டக்கூடிய செயல்களில் ஈடுபடுதல்.
- சாதிப்பிரிவுகளில் ரகசிய கூட்டங்கள்.

வெளியே நடந்த நிகழ்ச்சி உள்ளூர் மக்களிடையே தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கலாம்.

3. மாவட்டத்தை தலைமை அலுவலகங்களிலும், காவல் நிலையங்களிலும் கட்டாயம் கீழ்காணும் தகவல்கள் கிடைக்க வேண்டும்

* சாதிப்பட்டமான கிராமங்களின், இடங்களின் பட்டியல்.
* பிரச்சனைக்குள்ளாகும் நிகழ்ச்சிகள் மற்றும் சிக்கல்களுக்குரிய நிகழ்வுகளின் நிரல்
* சமூக எதிர்ப்புக் கூறுகளின் நிரல்
* வன்மம் மிக்க சாதிக் கூறுகளின் நிரல்.

4. குறிப்பிடத்தக்க வன்மம் மிக்க சாதிக் கூறுகளைப் பற்றிய தனிக் கோப்பு மற்றும் தகவல் அறிக்கைகள் மாவட்ட தனிக்கிளைகளில் பாதுகாக்கப்பட வேண்டும். குண்டர்களின் பத்திரிக்கைகளை காவல் நிலையத்தில் சாதி வெறியைத் தூண்டுவதாக அறியப்படும் குண்டர்கள் என்ற தகவலைப் பாதுகாக்க வேண்டும். குண்டர்கள் பதிவேட்டின் ஒரு பகுதியில் சாதி உணர்வைத் தூண்டும் குண்டர்கள் எனக் குறிப்பிட வேண்டும்.

5. மாநில புலனாய்வுப் பிரிவு புலனறிவது முன்கூட்டியே யூகிப்பது, திட்டமிடுவது ஆகியவற்றில் மிகக் கவனம் கொள்ள வேண்டும். மேலும் தென் தமிழகத்தில் சாதிப் போக்குகளைப் பற்றித் தெரிந்திருக்க வேண்டும்.

6. பொதுவாகத் தென் தமிழகத்தில், குறிப்பாக , இராமநாதபுர மாவட்டத்தில் நிலவிவரும் சாதிப் பாகுபாடு குறித்து காலமுறை இடைவெளிவிட்டு அறிக்கையிட்டும் தெரியப்படுத்தியும் இருக்க வேண்டும். சாதிச் சண்டையிலிருந்து பாதுகாத்துக்கொள்வதற்கு கீழ்க்காணும் சாதுர்யமான வழிகளைக் கையாளலாம்.

7. பாதுகாப்பு மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கை:

ஒய்வின்மையின் காரணம் / குறிப்பிட்ட உள் நடவடிக்கைகள், சில நேரங்களில் வெளியே நடைபெறும் சிக்கல்களின் / சண்டைகளின் எதிரொலியாக நடக்கலாம் (அ) வலுவாகலாம் (W/11.09.2011). ஜான் பாண்டியனை தூத்துக்குடி மாவட்டத்தில் தடுத்து நிறுத்தியதன் விளைவாக இராமநாதபுரத்தில் பளி தீர்க்கப்பட்டது) ஒரு வேளை உள்ளூர் பிரச்சனை என்றால் உள்ளூர் அதிகாரிகள்

- பிரச்சினைக்குரிய காரணிகளைக் கண்டு களைய வேண்டும் அல்லது பாதிப்பையாவது குறைக்கச் செய்ய வேண்டும். பிரச்சனைக்கு காரணம் உள்ளூரல்லாதவர்களினால் ஏற்படலாம். காவல் அதிகாரிகள் களத்தில் கவனமற்றிருக்கலாம். தெரியாமலும் இருக்கலாம். ஆகையால் உள்ளூர் காவல் அதிகாரிகள் தொடர்ந்து எந்த சூழலிலும் பிரச்சினைகளைக் கவனித்துக்கொண்டே இருக்கவேண்டுவது மிக முக்கியமானதாகும். எனவே ஒவ்வொரு காவல் அதிகாரியும், மூத்த காவல் அதிகாரிகளும் (நகர முதன்மைக் காவலர், மாவட்ட முதன்மை காவல் அதிகாரி / மண்டல முதன்மைக் காவல் அதிகாரி / பகுதிசார் காவல் அதிகாரிகள்) தீவிர நடவடிக்கை மேற்கொண்டு தொடர்ந்து வளர்ந்து வரும் பிரச்சனைச் சூழலைக் கவனித்து வரவேண்டும். மூத்த காவல் அதிகாரிகள் தவறாது காவல் படையை உரிய நேரத்தில் நிறுத்தி வைக்க வேண்டும். பத்திரிக்கையாளர்களுக்கு எச்சரிக்கை மணி ஒலி வழங்கக்கூடாது.
- இவ்வாறாக இருப்பது மாவட்ட ஆட்சியர், மாவட்ட வருவாய் அதிகாரி, மாவட்ட துணை ஆட்சியர், மண்டல வருவாய் அதிகாரி ஆகிய மாவட்ட நிர்வாகப் பொறுப்பாளர்களின் அடிப்படைக் கடமையும் பொறுப்புமாகும். இவற்றைச் செயல்படுத்துவதினால் சாதாரீதியாக ஏற்படும் மோதல்களைத் தவிர்த்து இணக்கமான நட்புணர்வுமிக்கவர்களாக வெவ்வேறுபட்ட இனக் குழுக்களை மாறுதலுக்குட்படுத்தலாம். இவர்கள் ஒன்றிணைந்தோ, தனித்தோ இயன்ற வரை முன்னெச்சரிக்கை நடவடிக்கையையும் பாதுகாப்பு நடவடிக்கையையும் மேற்கொண்டு கட்டுப்பாட்டுக்குள் நிறுத்தி ஒரு சாத்தியக்கூற்றை அடைய முடியும்.

கிடைக்கப்பெற்ற சாதிப்புலனாய்வுப்படி அனைத்து அண்மைக் காரணிகளைத் தீவிரமாகக் கையாளவேண்டும்.

8. அமைதிக்குழு ஏற்கனவே கூட்டப்பட்டுவிட்டது.

9. <u>இனக்குழுகாவல்:</u>

காவலர்கள் குறிப்பிட்ட இனத்தின் இளைஞர்களை அல்லது வெவ்வேறு மாநிலத்திலிருந்தும் வெவ்வேறு பகுதியிலிருந்தும் இனக் கலவரத்தின் போது

பணிக்காக முன்வரும் சொந்த மக்களைக் குறிப்பெடுத்து நிரல்படுத்தி கொள்ளவேண்டும். அவ்வாறு வருபவர்களுக்கும் இளைஞர்களுக்கும் தோள்பட்டையில் அடையாளத்திற்காக அட்டையைக் கொடுத்து அணியச் சொல்ல வேண்டும். இக்குழுவின் இளைஞர்களைக் காவலுக்கு பயன்படுத்துகிறபோது இனக்குழுவுக்குள் பிரிவு ஏற்படாது.

தமிழகத்தின் பல பகுதிகளில் நடைபெற்ற ஊர்வலங்கள்/நிகழ்வுகள்/சாதி மத நிகழ்வுகள், விழாக்கள்.

10. சாதி ஊர்வலங்கள்/வாகன ஊர்வலங்கள்.

செப்டம்பர் 11ஆம் நாள், ஆதி திராவிட மக்கள், குறிப்பாக அவ்வின இளைஞர்கள் தமிழகத்தின் தென் மற்றும் மையப்பகுதியிலிருந்து பரமக்குடி நோக்கி வாகனங்களில் அணிவகுத்தனர். அதுபோல், முக்குலத்தோர் இளைஞர்கள், கமுதி, பசும்பொன், ஆபிராமர் பகுதிகளிலிருந்து அக்டோபர் 30ஆம் நாள் தேவர் குரு பூஜையில் கலந்து கொள்ளக் குழுமினர். எனவே, இப்பிரிவினர் வந்து செல்லும் வாகனங்களின் விவரம் அறிய ஒரு தனி அலுவலர் பணியமர்த்தப்பட்டு அவர் வாகனங்களின் பதிவெண், வருவோரின் எண்ணிக்கை போன்ற விவரங்களைத் தொகுத்து இராமநாதபுரம் மாவட்டச் சிறப்புக் கிளைக்கு அனுப்பி வைக்கப் பணிக்கப்பெற்றார்.

மாவட்ட ஆட்சித் தலைவர் தென் மாவட்டம் ஒவ்வொன்றின் சாலைப் போக்குவரத்து அதிகாரி, சாலைப் போக்குவரத்து அலுவலர், வாகன ஊர்தி ஆய்வாளர், மாவட்டக் காவல் துறையினர் போன்றோரின் ஒத்துழைப்புடன் வாகன ஓட்டுநர்கள், வாகன உரிமையாளர்கள் போன்ற தகவல்களைப் பெறுவதற்குப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

வாடகைக்கு எடுக்கப்பட்ட வாகனங்களில் ஏணிகளோ, படிக்கட்டுகளோ வாகன மேற்கூரையில் ஏற்றி வரக்கூடாது என்றும், வாகன மேற்கூரையில் அமர்ந்து வரக்கூடாது என்றும், முழக்கங்கள் எந்தவொரு சாதிக்கு எதிராகவும் எழுப்பக் கூடாது என்றும் பதட்டம் நிறைந்த சாலைகளில் அவர்கள் பயணிக்கும்போது அறிவுறுத்தப்பட்டனர்.

ஆயுதங்கள் கொண்டு செல்லல், கம்புகள், கொடிகள், பதாகைகள், முழக்கங்கள், ஒலி பெருக்கிகள் எடுத்துச் செல்லல் ஆகியன முற்றிலுமாகத் தடை செய்யப்பட்டன. அவர்களுக்கு வழங்கப்பட்ட உரிமத்திலும் இவ்விதிமுறை குறிக்கப்பட்டுள்ளது.

11. சோதனைச் சாவடிகள்:

ஒவ்வொரு மாவட்ட எல்லைப் பகுதியிலும் கடும் சோதனைகளை நிகழ்த்தும் சாவடிகள் உருவாக்கப்பட்டன. இங்கு உலோகப் பாதைக் கதவுகளும், கடுங்காவலுக்குரிய நிழற்படக்

கருவிகளும், மாவட்டத் துணைக் கண்காணிப்பாளர் பதவிக்குக் குறையாத ஒரு அலுவலரால் கடக்கும் ஊர்திகளை முற்றிலுமாக ஆராயும் வகையில் நிறுவப்பட்டன.

சாதிப்பிரிவினர் செல்லும் வாகனங்களில் ஆயுதங்கள், கோல்கள், கற்கள், புட்டிகள், அமில பல்புகள், வெடிகள், செருப்புகள், தீப்பரவ வாய்ப்பளிக்கும் பொருள்கள், வெடிமருந்துகள் போன்ற பேரிடர் தரும் பொருள்கள் எவற்றையும் எடுத்து வர அனுமதி மறுக்கப்பட்டது.

வன்முறையாளர்களை அடையாளம் காண்பதற்காக ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் வரும் வாகனங்கள் தனி வண்ணக் குறியீடு கொண்டிருக்குமாறு ஏற்பாடு செய்யப்பட்டது.

ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் வாகனம் மாவட்ட எல்லைப் பகுதியைக் கடந்து செல்லும் போதும் அவ்வாகனம் காட்சிப் பதிவு செய்யப்பட்டது. இது வன்முறையைத் தவிர்க்கவும், எவரும் விதிமீறல் புரியாதிருக்கவும், எவரும் தவறிழைத்துவிட்டு தப்பிச் சென்று விடாமல் தடுக்கவும் பயன்பட்டது. இது சாதிப் பிரிவினரிடையே வன்முறை எழாமல் காக்கவும் உருவாக்கப்பட்டது.

ஒரு குறிப்பிட்ட மாவட்டத்திலிருந்து வெளிச்செல்லும் வாகனம் 5 அல்லது 10 இடங்களில் குழுவாகத் திரட்டப்பட்டு, கடுமையான காவல் கண்காணிப்புடன், காவல் துறையினரின் அரவணைப்பில் செல்லுமாறு திட்டமிடப்பட்டது. வாகனம் சென்று திரும்பும்போதும் இம்முறையே பின்பற்றப்பட்டது.

ஒரு மாவட்டத்திலிருந்து புறப்பட்டுச் செல்லும் வாகனங்களின் எண்ணிக்கையும், கலந்து கொள்வோர் பற்றிய தகவல் முன்கூட்டியே இராமநாதபுரம் மாவட்டத் தனிப்படைக்கும், மாவட்டம் முழுவதிலுமுள்ள சிறப்புக் கிளைகளுக்கும் தெரிவிக்கப்பட்டது.

பதட்டமான கிராம/நகர்ப்புறப் பாதைகள், வன்முறைக்கு வழிவகுப்பனவாக இருந்தால், வலுவான காவல் துறையினர் கண்காணிப்புடன் ஓர் உதவி ஆய்வாளர் அல்லது ஒரு மாவட்டத் துணைக் கண்காணிப்பாளர்/உதவி மாவட்டத் துணைக் காண்காணிப்பாளர் எந்தச் சூழ்நிலையையும் சமாளிக்கும் வகையில் பணியமர்த்தப்பட்டார்.

இராமநாதபுரம் மாவட்டத்திற்குள், மதுரை – இராமநாதபுரம் தேசிய நெடுஞ்சாலை வழியே வாகனம் நுழையும்போது மிகக் கடுமையான சோதனைக்குட்படுத்தும் சாவடிகள் அமைக்கப்பட்டன. அவை ஒவ்வொரு 5 கி.மீ. தொலைவிற்குள் அமைக்கப்பட்டு வன்முறை நிகழாவண்ணம் முன்னேற்பாடுகள் செய்யப்பட்டன. பெரிய அளவிலான சாதிப் பிரிவினை எழாதவாறு தடுக்க இம்முறை துணைபுரிந்தது.

சாதிப் படையினர், மாவட்டக் காவல் துறை அலுவலரிடம் இசைவு பெற்ற பின்னரே பிற மாவட்டங்களிலிருந்து இராமநாதபுரம் மாவட்டத்திற்குள் நுழைய வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது. அவர்களுக்கு வழங்கப்பட்ட உரிமம் ஒரு குறிப்பிட்ட வழியிலேயே

செல்லுவதற்கும், வேறு பாதைகளில் அவர்கள் பயணிப்பதைத் தடுப்பதற்கும் பயன்பட்டது. வலுவான உலோகத் தடுப்புகள், பாதைகள் பிரியும் இடங்களில் அல்லது தேவைப்படும் பகுதிகளில் பதட்டத்தைத் தணிக்கும் வகையில் பொருத்தப்பட்டன.

சாதிப் படையினர் தெருக்கள், சாலைகள், பிற சாதியினர் பெருமளவில் வாழும் இடங்கள் இவற்றிற்குள் நுழையாவண்ணம் அவர்களின் பயணத்திற்கு இசைவு வழங்கப்பட்டது. தவிர்க்க இயலாத சூழலில் பதட்டமான பகுதிக்குள் சாதிப்படையினர் நுழைய நேரிட்டு விட்டால், அவ்வப் பகுதிகளில் வாழும் சாதிச் செல்வாக்கு மிக்கோர் தத்தம் சமுதாய மக்களிடம் சாதி ஒருமைப்பாட்டைக் காக்க வலியுறுத்தும்படியும் அறிவுறுத்தப்பட்டது.

சாதிப்படையினர் செல்லும்போது வாகனங்களில் வன்முறை ஏற்படுத்தும் ஆயுதங்கள் வைத்துள்ளனரா எனக் கண்டறியுமாறு உள்ளூர்க் காவல் துறையினருக்கும் தெரிவிக்கப்பட்டிருந்தது. இது வன்முறையைத் தடுக்கும் நோக்கில் மட்டுமே மேற்கொள்ளப்பட்டது. ஒரு குறிப்பிட்ட பிரிவினருக்கு எதிராகச் செய்யப்படவில்லை. அவ்வாறு சோதனையிடும்போது, அந்தந்தச் சமுதாயப் பொறுப்பாளர்கள் எழுப்பும் தேவையற்ற குற்றச்சாட்டுகளைத் தவிர்க்கும் வகையில் அவர்களே முன்னிலை வகிக்கக் கேட்டுக் கொள்ளப்பட்டனர். இத்தகைய நிகழ்வுகள் காட்சிக் கருவியிலும் பதிவு செய்யப்பட்டன.

பதட்டமான பகுதிகளில், கற்கள், பாறைகள் கிடந்தால் அவற்றைத் தெருக்களிலிருந்தும், சந்துகளிலிருந்தும் அப்புறப்படுத்திய பின்னரே பயணத்தைத் தொடங்குமாறு காவல் துறையினர் ஏற்பாடு செய்திருந்தனர்.

பதட்டமான பகுதிகளில் கூடுதலாக விளக்கு வசதியும், மின்னாக்கி வழி ஒளி வசதியும் ஏற்படுத்த அறிவுறுத்தப்பட்டது. ஒலிபெருக்கிகள், அறிவிப்பான்கள் போன்றவற்றை உள்ளூர்வாசிகள் பயன்படுத்தக்கூடாது என்றும் தவறான வழியில் ஒலிபெருக்கியைப் பயன்படுத்தல் கட்டாயம் வன்முறைக்கும் பதட்டத்திற்கும் வழிவகுக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஊர்வலம் செல்லும் பாதையில் சாதிக் கூட்டங்களைச் சாதிச் சமுதாயத் தலைவர்கள் நிகழ்த்தக் கூடாது. செப்டம்பர் 11 மற்றும் அக்டோபர் 30ஆம் தேதிகளில் சாதிச் சடங்குகள் நிகழவிருந்தமையால் சாதிக் கூட்டங்களும், பிற சாதிக்கு எதிரான ஆவேசப் பேச்சுகளும் தடை செய்யப்பட்டன. (இது அரசு நிகழ்த்தும் பசும்பொன் தேவர் குரு பூஜைக்குப் (30 அக்டோபர் பொருந்தாது.

தீத்தடுப்பான்கள் இராமநாதபுரம் மாவட்டத்தின் ஒவ்வொரு கிராமத்திற்கும், ஒவ்வொரு பதட்டமான பகுதிக்கும் அமைக்கப்பட்டன.

ஒவ்வொரு பதட்டம் மிகுந்த பகுதிக்கும் அப்பகுதிக்கான நீதிபதிகள் அன்றாட நிலையைக் கண்காணிக்கக் கேட்டுக் கொள்ளப்பட்டது.

மறியல் ஏதேனும் நிகழ்ந்தால் அதனைக் கண்காணிப்பதும், அப்பகுதி சாதி சார்ந்த மக்களைக் கணக்கெடுப்பதும், உதவி ஆய்வாளர் நிலையில் உள்ள ஒருவருக்கு அளிக்கப்பட்டது.

12. முன்கூட்டியே கைது செய்தல்:

நிகழ்ச்சிக்கு முன்போ, நிகழ்வு நடத்தப்படும் நாளிலோ முன்கூட்டியே எவரும் கைது செய்யப்படவில்லை. நிகழ்ச்சி நன்கு நடைபெறுவதை உறுதி செய்யும் வகையில் முன்கூட்டி கைதுகள் தவிர்க்கப்பட்டன. அந்த நிகழ்வு அமைதியாக நடந்து முடிந்தபின்னரே கைதுகள் நடைபெற்றன. ஒருவர் தென்தமிழகத்தின் ஒரு மூலையில் கைது செய்யப்பட்டால், சாதிப்படையினரிடம் குறுஞ்செய்தி வடிவிலோ, செல்பேசி வழியிலோ பொய்த்தகவல் சென்றடைவதை முந்தைய நிகழ்வுகள் காட்டுகின்றன. எனவே, முக்கியமான நாட்களில் சாதிப் பிரிவினர் இயங்கும்போது காவல் துறையில் கடும் கண்காணிப்பை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

13. மனித சக்தி ஒருங்கிணைப்பு மற்றும் பணியில் ஈடுபடுத்துதல்:

தென் தமிழகம் முழுவதுமே உஷார் நிலையில் இருக்க வேண்டிய நிலையில், மாநிலம் முழுவதும் உள்ள மனித சக்தியினை அங்கு ஒருங்கிணைக்க வேண்டியது அவசியமாகிறது.

- ஊர்க்காவல் படையினரை தவறாமல் பெருமளவில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்;
- உள்ளூர் பதட்டங்களை சமாளிப்பதற்கு ஏதுவாக, இராமநாதபுரம், சிவகங்கை மாவட்டங்களில் பிற மாவட்டங்களிலிருந்து வந்து பணிபுரியும் காவல் அதிகாரிகள் மற்றும் காவலர்களுக்கு உள்ளூர் மூத்த காவல் துறை அலுவலர், தம் சகாக்களுடன் உதவிபுரிய வேண்டும்.
- ஒருமைப்பாட்டு உணர்வும், நடுநிலைமையும், திறமையும் உள்ளோரை மட்டுமே பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்த வேண்டும்.
- மனித சக்தி ஒதுக்கீடானது குறிப்பிட்ட செயல்களை செய்துமுடிப்பதற்கு காவல்துறை அதிகாரிகளின் முழுமையான ஒத்துழைப்போடு கூடியதாக இருத்தல் வேண்டும். உதாரணத்திற்கு, ஓர் உதவி ஆய்வாளரின் கீழ் எத்தனை காவலர்கள் பணிபுரிவார்கள், எத்தனை அமைப்புகள் ஓர் ஆய்வாளரின் கீழ் பணிபுரிகின்றன, எத்தனை ஆய்வாளர்கள் ஒரு மாவட்டத் துணை கண்காணிப்பாளர்/ கூடுதல் கண்காணிப்பாளர்/ கண்காணிப்பாளர் அவர்களின் கீழ் பணிபுரிவார்கள்.

- மொத்த அமைப்பிற்கும் சுருக்கக்கதை கூறல்:- ஒரு குறிப்பிட்ட மாவட்டத்தில் மனித சக்தியை பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்துவதற்கு முன்பு மாவட்ட/ மாநகர காவல்துறை உயர்அதிகாரியானவர், காவலர்களின் கடமைகள், பொறுப்புகள் மற்றும் அப்பகுதியின் இனம் சார்ந்த பின்னணி பற்றிய செய்திகளை சுருக்கமாகக் கூறுதல் வேண்டும். இச்செயலானது வெளிமாவட்டங்கள்/ வேறு அமைப்புகளிலிருந்து வரும் காவலர்கள் அப்பகுதியின் இனம் சார்ந்த பின்னணியையும், தற்பொழுது உள்ள இடர்பாடுகள் பற்றியும் புரிந்து கொள்ள ஏதுவாக இருக்கும்.
- சம்பவ இடத்தில் சுருக்கக்கதை கூறல்: பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருக்கும் காவலர்களிடம் அவ்விடத்தைப் பற்றி மாவட்ட காவல்துறை உயரதிகாரியோ அல்லது அவரது துணை அதிகாரிகளோ சம்பவ இடத்தில் தெரிவிக்கவேண்டும். இச்செயலானது வெளிமாவட்டங்கள்/ வேறு அமைப்புகளிலிருந்து வரும் காவலர்கள் அவரவர்களின் கடமைகளையும் பொறுப்புகளையும் உணர்வதற்கு ஏதுவாக அமையும். போதிய சுருக்கக் கூறுதல் இல்லாமல் இருந்தாலோ அல்லது சுருக்கக்கூறுதலே இல்லாமல் இருந்தாலோ நெருக்கடி நிலையில் காவலர்களும் அதிகாரிகளும் தீர்க்கமாக செயல்பட முடியாத நிலை ஏற்படும்.

கருவிகள் பயன்படுத்துதல்: பொது இடங்களில் அறிவிப்புச் செய்தல், கம்பியில்லா தொலைதொடர்புக் கருவிகள், வாக்கி டாக்கிகள், கம்புகள், விளக்குகள், மழை உடைகள், கண்ணீர்ப் புகைக் குண்டுகள், தலைக் கவசங்கள் போன்றவற்றை ஒவ்வொரு காவலருக்கும்/குழுவிற்கும்/பாதுகாப்புப் படையினருக்கும் வழங்கப்பட வேண்டும். இவற்றைச் சூழலுக்கு ஏற்றவாறு அந்தந்தப் பகுதியின் தன்மைக்கு எற்பப் பயன்படுத்த வேண்டும்.

- துப்பாக்கி போன்ற கருவிகளைச் சில குறிப்பிட்ட தனிப்படைக்கு மட்டும் அரிதான சூழ்நிலைக்கு ஏற்றவாறு தரவேண்டும். எல்லாக் காவலருக்கும் இவ்வுரிமையை வழங்கக்கூடாது எனும் கருத்து உள்ளது. ஒரு வன்முறை தீவிரமாகும்போதும், ஊடுருவல் மற்றும் திட்டமிடப்பட்ட சதிச்செயல்கள் நிகழும்போது மட்டுமே துப்பாக்கி எடுக்கும் உரிமையைத் தர வேண்டும். இது பற்றி, பொது மக்கள், அரசியல் தலைவர்கள் மற்றும் மகளிர் குழுக்களை கலந்தாலோசிக்கும் கூட்டம் நடத்தப்பட வேண்டும். அவர்களின் கருத்துக்களை கணக்கில் கொள்ள வேண்டும்.

(மேற்கூறியவாறு, துப்பாக்கியைப் பயன்படுத்துவது பற்றி பொது மக்கள் மற்றும் பிறர் அடங்கிய குழுவில் கலந்தாலோசிப்பது வெவ்வேறு கருத்துக்களை முன்னிறுத்தும். இப்பிரச்சனையைப் பற்றிய முடிவெடுப்பதற்கு முட்டுக்கட்டையாகக்கூடும். துப்பாக்கி என்பது காவலர்களின் உடைக் குறியீட்டில் அடங்கியதாகும். துப்பாக்கியைப் பயன்படுத்தும் போது கவனமாக இருக்க வேண்டும் என்பதைத் தான் காவலர்களுக்குத்

தெரிவிக்கவேண்டுமே தவிர, எக்காலத்தில் பயன்படுத்த வேண்டும் என்பதனை சூழ்நிலைதான் முடிவெடுக்க வேண்டும்).

14. சில குறிப்பிட்ட உயரதிகாரிகளின் கீழ் பணிபுரியும் காவலர்களுக்கு மட்டுமே துப்பாக்கிகளும் கண்ணீர்ப் புகை குண்டுகள் போன்றவையும் எளிதாகக் கிடைக்கும்படி இருத்தல் வேண்டும். இவர்கள் தாங்கள் வைத்திருக்கும் துப்பாக்கிகளை தங்களின் மேலதிகாரியின் அனுமதியின்றி பயன்படுத்துதல் கூடாது.

அவசரப் பாதுகாப்புப் படை: ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள பதட்டம் மிகுந்த பகுதிகளில் 10% காவல் படையும், காவல் கண்காணிப்புக் கருவிகளும் ஆயத்தமாக வைத்திருக்கப்பட வேண்டும். கடந்தகாலத்தில், ஒரு போராட்டம் நிகழும் போது, போதுமான மனிதவளம் மற்றும் கருவிகள் இல்லாமல் காவலதிகாரிகள் திணறியதை நாம் பார்த்திருக்கிறோம்.

பாதுகாப்புத் திட்டம்: சாதிக் கலவரத்தைத் தடுக்கும் வகையில் ஒவ்வொரு மாவட்டமும் விரிவான பாதுகாப்புத் திட்டத்தையும், பாதுகாப்பு முன்னேற்பாடுகளையும் கொண்டிருக்க வேண்டும். இதனால் வன்முறையற்ற சூழ்நிலையை காவல் படை உருவாக்கலாம். இடையூறு ஏற்படும் சமயத்தில் எவ்வித செயல்திட்டத்தினை மேற்கொள்ளலாம் என்பதை காவல்துறை அறிய இது வழிவகுக்கும். இந்தத் திட்டத்தை முன்கூட்டியே தயாரிக்கப்படுதல் வேண்டும்.

- அத்தகைய பாதுகாப்புத் திட்டமானது, அந்நகரம்/ மாவட்டம்/ பரப்பிடம் ஆகியவற்றின் இட அமைப்பு, இயல்பான புள்ளி விவரம், மக்கள் தொகை அமைப்பு, பதட்டமான இடங்களின் பட்டியல், காவலர்களின் அணிவகுப்பு, கண்காணிப்பு மற்றும் சோதனைச் சாவடிகள், எக்காவலர் எந்தப் பகுதியை கண்காணிக்கிறார் எளன்ற விவரம், கூடுதல் படை தேவைப்படும் இடங்கள், மிகவும் தீவிரமாகக் கண்காணிக்கப்பட வேண்டிய குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களின் பட்டியல், இடையூறு மற்றும் வன்முறை நடக்கும் சமயங்களில் பாதுகாக்கப்பட வேண்டியவர்களின் பட்டியல், கடந்த காலங்களில் கொலை, கொள்ளை மற்றும் தீவைப்பு சம்பவ இடங்களின் பட்டியல், எதிரெதிர் சாதிகளைச் சேர்ந்தவர்கள் அதிக எண்ணிக்கையில் வசிக்கும் இடங்களின் பட்டியல், கடந்த காலங்களில் தடையாணைகள் நடைமுறையில் உள்ள காவல்நிலையங்களின் பட்டியல், கைது செய்யும் குழுவிற்கு தலைமை வகிப்பவர் யார் என்ற விவரம், விசாரணைக் குழுவின் தலைவர் யார் என்ற விவரம், நீதித்துறை நடுவரின் பெயர் மற்றும் இருப்பிடம், தீயணைப்பு மற்றும் அவசர ஊர்திகளின் இருப்பிடங்கள், முக்கியமான அதிகாரிகள், காவல்நிலையங்கள், தீயணைப்பு நிலையங்கள், தேவையான அமைப்புகள், மருத்துவமனைகள் ஆகியவற்றின் தொலைபேசி எண்கள் ஆகிய விவரங்கள் அனைத்தும் கொண்டதாக இருக்கவேண்டும்.

15. திட்டத்தைத் திறம்பட நிறைவேற்ற ஏதுவாக இருக்கும் வகையில் காவல்துறையினருக்கு மாதிரி பயிற்சிகள் அளிக்கப்பட வேண்டும். இத்திட்டத்தை அவ்வப்போது காலத்திற்கேற்றவாறு மாற்ற வேண்டும். இத்திட்டத்திற்கு உண்மையிலேயே தேவைப்படும் மனிதவளமும், திட்டத்தை நிறைவேற்றுவதற்குத் தேவைப்படும் என்று கணிக்கப்பட்ட மனிதவளமும் ஒன்றாக அமைதல் வேண்டும்.

16. கூட்டுப்பாட்டு அறை:- கலவரம் நிகழும் இடத்திற்கு உடனடியாக செல்ல ஏதுவாக, ஒவ்வொரு நகரம்/ மாவட்டம் ஆண்டு முழுவதும், நன்றாக செயல்படக்கூடிய மற்றும் போதுமான மனிதசக்தியைக் கொண்ட கட்டுப்பாட்டு அறையை உள்ளடக்கியதாக அமைதல் வேண்டும். கட்டுப்பாட்டு அறையில் போதிய எண்ணிக்கையிலான தொலைபேசிகள் மற்றும் ஒலிபெருக்கிகள் செயல்பட வேண்டும். கட்டுப்பாட்டு அறையானது முதன்மை நிகழ்வுகளை கையாளுவதற்கும் காவல்துறையின் அனைத்து தினசரி செயல்களை ஒருங்கிணைப்பதற்கும் ஒரு தலைமை முகவாண்மை ஆகும். கட்டுப்பாட்டு அறை இல்லாதவிடத்து அப்பகுதி போதிய மனிதவளம், ஒலிபெருக்கிகள், தொலைபேசித் தொடர்புகள், வரைபடங்கள், பிரச்சனைக்குரிய மையங்கள், திருவிழாக்கள், பொதுக்கூட்ட இடங்கள், ஊர்வலப் பாதைகள் போன்றவற்றின் விவரங்களைக் கொண்டதாக இருக்க வேண்டும். சம்பவங்கள் நடைபெறும் போது அப்பகுதியின் பின்னணி மற்றும் நில அமைப்பினையும், அங்குள்ள மனிதவளம் மற்றும் காவல் பணிக்கான கருவிகள் உபயோகப்படுத்தும் முறையினையும் நன்கு அறிந்த துணை கண்காணிப்பாளர்/ கூடுதல் கண்காணிப்பாளர்/ காவல் கண்காணிப்பாளர் அவர்கள் கட்டுப்பாட்டு அறையை தலைமை தாங்க வேண்டும். இவ்வதிகாரி கம்பியில்லா தொலைதொடர்பு மற்றும் அனைத்து செயல்பாடுகளையும் கண்காணித்தல் வேண்டும்.

17. சச்சரவுகள் ஏற்படுகையில் காவலர்களின் தலையீடு:

- போதுமான ஏற்புத்தன்மையை உருவாக்க, இனக்கலவரக் கூட்டத்தினிடையே நிலவும் உளவியல் சார்ந்த நிலையை அறிந்துகொள்வது காவலர்களுக்கு அதிமுக்கிய பண்பாக அமைகிறது. இனக்கலவரம் நடக்கையில் காவலர்கள் தலையிடும் நேரம், கூட்டத்தைக் கலைத்து அதை அடக்கும் நேரம், கட்டுக்கடங்காத கலவரக்காரர்களை கைது செய்வது ஆகியவை தகுந்த நேரத்தில் முடிவெடுக்கும் திறனையும் உயர்ந்த தலைமைப்பண்பையும் சார்ந்ததாகும்.
- தன்னேற்பு பொறுப்பு: இனக்கலவரங்கள் நடக்கும்போது பணியில் மூத்த அதிகாரி தன்னேற்பு பொறுப்பு ஏற்க வேண்டும். மாறாக, மேற்கூறிய

சூழ்நிலையில் கலவரத்தின் ஆழத்தையும் அதனால் உண்டாகக்கூடிய குழப்பங்களையும் அறியாத கீழ்நிலை அலுவலர்களிடம் பொறுப்பு ஒப்படைக்கப்படக் கூடாது.

- தாக்குதலுக்குள்ளாகக் கூடிய பகுதிகளில் நிர்வாக நடுவர் இருக்க வேண்டும்.

18. தடையாணை: பொது மற்றும் தனியார் சொத்துகளை அழிக்கும் வழிகளில் கொள்ளை மற்றும் தீயிடுதல் பொதுவானவையாக இருப்பதனால், தடையாணை பிறப்பிப்பதே இச்செயல்களைத் தடுக்க சிறந்த வழியாகும். மோதலைத் தவிர்க்க முடியாத சூழ்நிலையில், குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 144–ன் படி தடையாணை பிறப்பிக்கலாம். உதாரணத்திற்கு, வன்முறையைத் தடுப்பதற்கு கட்டைகள், தடிகள், துப்பாக்கிகள் போன்றவற்றோடு உலவும் மக்களையும், ஐவருக்கு மேல் கூடும் கூட்டங்களையும் கூடவிடாமல் தடுப்பது உகந்த செயலாகும்.

ஊரடங்கு உத்தரவானது அதிகப்படியான ஒரு செயலாகும். எனவே, மக்களின் நடமாட்டத்தை கட்டுப்படுத்துகிறவிடத்து அந்த பரப்பிடங்களை தடைசெய்வது முழுமையாக அவசியமாகிறது. ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்ட பின், அதை முழுமையாக அமல்படுத்த சமூக விரோதிகள் மற்றும் சாதிக் கலகக்காரர்கள் ஒன்று சேராமல் இருப்பதற்கு போதுமான காவல் படை அனுப்பப்படவேண்டும். தடைவிதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள குடும்பங்களுக்கு அத்தியாவசிய பணிகள் மற்றும் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளனவா என்பதை நிர்வாகம் உறுதி செய்தல் வேண்டும். தடை அனுமதிச்சீட்டுகளை உடனடியாக மருத்துவச் சிகிச்சை தேவைப்படும் மக்களுக்கு வழங்க முடியும்.

- தடைக்காலத்தின் போது, சட்டத்தை மீறுகின்ற நபர்கள் தொடர்பாக காவல்துறையானது உறுதியாகவும், பணிந்து கொடுக்காமலும் நடந்து கொள்ளுதல் வேண்டும். ஆனால், சாதாரண குடிமக்களுக்கு மிகவும் நம்பிக்கையாகவும், செவி சாய்ப்பவர்களாகவும் நடந்து கொள்ளுதல் வேண்டும்.
- தடை ஆணையை பின்பற்றுவதில் ஏற்படுகின்ற காலதாமதமானது பல பகுதிகளில் மிக்க சிரத்தையான அழிவுகளை ஏற்படுத்தும். ஆகவே, காவல்துறை மற்றும் வருவாய்த் துறையானது சரியான நேரத்தில் சரியாக முடிவு செய்வதற்கு அவர்களுடைய உளத்தேர்வினை பயன்படுத்துதல் வேண்டும்.
- கலகக் கூட்டங்களை/ சட்டவிரோத கூட்டங்களை கலைத்தல்: காவல்துறை நிலையாணை (PSO) 731–ஆனது சட்டவிரோதக் கும்பலை கலைப்பது தொடர்பாக மிகவும் தெளிவாக கூறுகிறது மற்றும் எடுகுறிப்புகள் கீழே அளிக்கப்பட்டுள்ளது. இதை

கடைபிடிப்பதற்கு மற்றும் பின்பற்றுவதற்கு களநிலை காவல் அலுவலர்களால் தொடர்ச்சியாக ஆய்வு செய்தல் வேண்டும்.

- காவல்துறை பொறுப்பு அலுவலர் அல்லது நீதித்துறை நடுவர் சட்டவிரோத கும்பலை கலைப்பதற்கு உத்தரவு பிறப்பிக்கலாம். அவர்கள் கலைந்து செல்லாது இருப்பின் அவர்களை கலைப்பதற்கு அலுவலர் வலிமையை பயன்படுத்தலாம். கலைப்பின் போது பின்வரும் கருத்துக்களை எண்ணத்தில் வைத்துக்கொள்ளுதல் வேண்டும்.
- அதிகார வரம்பினை உடைய நீதித்துறை நடுவர் (அல்லது) மாவட்ட நிர்வாக நடுவர் நேரத்தை வீணடிக்காமல் பிரச்சனைக்குரிய இடத்திற்கு வரவழைக்கப்படுதல் வேண்டும்.
- காவல்துறை அலுவலர் எவரும் பிடியாணையின்றி பொதுமக்களின் உதவியுடன் சட்டவிரோத கும்பலின் உறுப்பினர்களை கைது செய்யலாம் மற்றும் கும்பலை கலைக்கலாம்.
- வலிமையைப் பயன்படுத்துவதற்கு முன்பு காவல் துறை கும்பல் கூடுவது சட்டவிரோதமானது என்பதை ஒலிபெருக்கியின் மூலமாக எச்சரிக்கை செய்தல் வேண்டும் மற்றும் அவர்களை கலைந்து செல்லுமாறு கேட்டல் வேண்டும்.
- கும்பலை கையாளும் போது, காவல் துறையினர் நேரடியாக சுடுதல் கூடாது. காவல் துறையினர் படிப்படியாக நடவடிக்கையை மேற்கொள்ளுதல் வேண்டும். கும்பலுக்கு நட்புறவான ஆலோசனை வழங்குதல் தொடங்கி, அமைதியை காப்பதற்கு சாதி தலைவர்களுடன் உரையாடுதல் வேண்டும். பின்பு மிதமாக காவல் பிரம்பை பயன்படுத்துதல் வேண்டும்.
- கண்ணீர் குண்டுகளை பயன்படுத்துவது, வானை நோக்கி சுடுவது மற்றும் முழங்காலுக்கு கீழ் சுடுவதானது கடைசி முயற்சியாக மட்டுமே இருத்தல் வேண்டும்.
- பொறுப்பு அலுவலர், கும்பலின் எண்ணம் மற்றும் நடத்தையானது கண்ணீர் வெடிகுண்டினால் கட்டுப்படுத்த முடியாத சூழ்நிலையில் இருப்பதாக கருதுவாரானால் காவல் பிரம்பால் அடிப்பதற்கு ஆணையிடலாம்.
- சூழ்நிலைகள் அனுமதித்தாலன்றி கண்ணீர் குண்டுகளை கதவுகள் மூடப்பட்ட அறைகளில் சுடுதல் கூடாது. அது மூச்சுத்திணறல், மூச்சு சுவாசம் போன்ற கடுமையான உடல்நலக்கேடுகளை உருவாக்குவதற்கு வழிவகை செய்யும்.
- கண்ணீர் வெடிகுண்டு முயற்சி பயனளிக்கவில்லையென்றால் காவல் பிரம்பை பயன்படுத்த முடியும். காவல்பிரம்பை பயன்படுத்துவதானது காவலர்கள் கும்பலை வலிமையாக கட்டுப்படுத்த முடியும்போது மட்டுமே ஆகும். அது காவல்தரப்பில்

கடுமையான அவசர சிகிச்சைக்கு வழிவகுக்கும். அது அடுத்தடுத்து கடுமையான விளைவை ஏற்படுத்தும்.

- கும்பலானது செவிசாய்க்காது இருக்குமேயானால் அலுவலர் சுடுகருவிகளை பயன்படுத்தலாம். ஆனால், அது கடைசி அணுகுமுறையாக மட்டுமே இருத்தல் வேண்டும்.

- நிருவாக நடுவர், எப்பொழுது வலிமை பயன்படுத்தப்பட முடியும் என்பது குறித்து முடிவு செய்தவற்கான கடமைப் பொறுப்பை இல்லாதிருக்கையில் சூழ்நிலைகளில் வருகை தந்துள்ள காவல் அலுவலர் இந்திய தண்டனைத் தொகுப்புச் சட்டத்தின் 90 முதல் 103 வரையிலான பிரிவுகளின்படி (தனியார் பாதுகாப்பு உரிமை) வலிமையைப் பயன்படுத்த முடியும். காவல் அலுவலர் பயன்படுத்தப்பட வேண்டிய வலிமையின் சரியான அளவினை மற்றும் அதைப் பயன்படுத்தும் முறையை முடிவு செய்தல் வேண்டும். தேவையான வலிமையைவிட அதிகமான வலிமையை பயன்படுத்தப்படுதல் கூடாது. கலைப்பதற்கு பொறுப்புடைய ஆணையை பிறப்பிக்கும் அலுவலரிடமிருந்து ஆணையின்றி அலுவலர் எவரும் சுடுகருவிகளை பயன்படுத்துவதற்கு தன்விருப்பத்தினை பயன்படுத்துதல் கூடாது.

- எந்த சூழ்நிலைகளில் வானத்தை நோக்கி எச்சரிக்கை சுடுவதை சுடுதல் கூடாது. மிகவும் அச்சுறுத்தும் கூட்டத்தின் ஒரு பகுதிக்கு எதிராக சுடுவதற்கு ஆணை பிறப்பித்தல் ஆகாது.

- சுடுவது இனிமேல் தேவையில்லையென்றால் சுடுவதை உடனடியாக நிறுத்துதல் வேண்டும். அமைதி குலைவு ஏற்படுமென சந்தேகிக்கையில் ஆயுதப்படைகளை வரவழைக்கும் போது சிவப்புக் கொடிகளை கையாளுதல் வேண்டும். கும்பலானது கொடியின் மீது பொறிக்கப்பட்டுள்ள எழுத்துக்களை படிக்கும் நிலையில் இருக்கும்போது, சுடுவதற்கு முன்பு சிவப்பு கொடிகளை பறக்கவிடுதல் வேண்டும்.

- கும்பலைக் கலைப்பதற்காக காவலை பயன்படுத்தும்போது, இரும்பு கவசங்கள் மற்றும் கொண்டுசெல்லும் தடைக்கருவிகள் உள்ளடங்கலாக சீருடைகளை அணிய வேண்டும்.

- யாராவது காயமடைவாரானால், கலவரத்தைக் கட்டுப்படுத்தும் ஒரு பகுதியாக, நேரத்தை வீணடிக்காமல், அவசர ஊர்தியின் உதவியுடன் உடனடியாக மருத்துவமனைக்கு கொண்டு செல்லுதல் வேண்டும்.

- முழுவதுமாக அமைதி திரும்பும் வரையில் காவல் அணிவகுப்பை மற்றும் காவல் கண்காணிப்புகளை தெளிவாக காவல் முன்னிலையாகுதல் வேண்டும்.

தெற்கு மண்டலத்தின் காவல்துறைத் தலைவர் கண்காணிப்பு அலுவலராவார்:-

இராமநாதபுர மாவட்டத்தில் ஏற்பட்ட நிகழ்வுகளினால், தமிழ்நாட்டின் தெற்குப் பகுதி எதிலும் எதிரிடையான செயல் மேம்பாடு எதுவும் இருக்கிறதென்றால், தெற்கு மண்டலத்தின் காவல் தலைமை ஆய்வாளர் தெற்கு தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் பாதுகாப்பு ஏற்பாடுகளுக்காக தலைமை அலுவலராக இருத்தல் வேண்டும். மற்றும் பாதுகாப்புத் திட்டத்தை சுமூகமாக நிறைவேற்றுவதை உறுதி செய்வதற்கு அனைத்து மூத்த காவல் அலுவலர்களுக்கு மற்றும் காவல்துறை கண்காணிப்பாளர் படிநிலைக்கு கூடுதலானவர்களுக்கு தெளிவான அறிவுரை வழங்குதல் வேண்டும். தலைமை காவல்துறை ஆய்வாளர் அவரே இராமநாதபுரம் மாவட்டத்தில் தங்கியிருத்தல் வேண்டும். இராமநாதபுரம் மாவட்டமானது, பிற மாவட்டங்களுடன் ஒப்பிடுகையில் செப்டம்பர் 11 மற்றும் அக்டோபர் 30 ஆகிய இரண்டு நிகழ்வுகளைப் பொருத்தவரையில் அது மிகவும் பதட்டமானதாக இருக்கின்றது.

ஆட்சித்தலைவர்களுடன் ஒருங்கிணைந்த கூட்டம்.

தெற்கு தமிழ்நாட்டின் 8 மாவட்டங்களின் ஆட்சித்தலைவர்கள் அனைத்து மாவட்டங்களிலும் சட்டம் மற்றும் ஒழுங்கை பராமரிப்பதில் தலையாய அங்கம் வகிப்பது அவசியமானதாகும். அனைத்து மாவட்ட ஆட்சித்தலைவர்களுடன், காவல் கண்காணிப்பாளர்களுடன், தெற்குத் தமிழ்நாட்டின் தலைமை துணைக் கண்காணிப்பாளருடன் (கன்னியாகுமரி மாவட்டத்தைத் தவிர்த்து), தெற்கு மண்டல தலைமை காவல் ஆய்வாளருடன் மற்றும் சென்னையில் உள்ள காவல் தலைமையாளர்களுடன் சேர்ந்து ஒருங்கிணைந்த கூட்டத்தை நடத்துவது முழுமையான அவசியமான ஒன்றாகும். தமிழ்நாடு அரசின் தலைமை செயலாளர் இத்தகைய கூட்டத்திற்கு தலைமை வகிப்பாரானால் அது ஒரு பொருத்தமுடைய செயலாகும்.

- **மறைமுகப்பணி நிதியங்கள்:-**

பாதுகாப்பு திட்டத்தை திறம்பட நிறைவேற்றுவதற்கு குறிப்பாக இராமநாதபுரம் மாவட்டத்திற்கும் பொதுவாக பிற மாவட்டங்களுக்கும் போதிய மறைமுக சிறப்பு ஒதுக்கீட்டு பணி நிதியங்களை ஏற்படுத்துதல் வேண்டும். நிதியங்களின் குறைபாடானது பாதுகாப்புத் திட்டத்தை நிறைவேற்றுவதில் எப்பொழுதுமே தடைக்கு வழிவகுக்கும்.

- தெற்கு மண்டலத்தின் தலைமை காவல் துறைத் தலைவர் ஆட்களின் பற்றாக்குறை/ கிடைக்கத்தக்க பொருள்களின் ஆதாரங்கள் சிறப்பு கவனத்திற்கு தேவையான பரப்பிடங்கள், பல்வேறு அலுவலர்களிடமிருந்து பெறப்பட்ட அல்லது பெறப்படாத ஆதரவுகள் மற்றும் திட்டங்கள் தொடர்பாக மேலான மேம்பாட்டிற்கு அலுவலர்களின் கருத்துக்களை நிறைவேற்றுவதற்கான திட்டத்தில் காவல்துறை கண்காணிப்பாளர்கள்

படிநிலைக்கு மற்றும் அதற்கு மேலான அனைத்து அலுவலர்களிடமிருந்து சங்கதிகளை திரட்டுதலும் ஒருங்கிணைத்தலும் வேண்டும். ஒருங்கிணைக்கப்பட்ட சங்கதிகளை எதிர்காலத்தில் நிறைவேற்றுவதற்காக தெற்கு மண்டலத்தின் இராமநாதபுரம் மாவட்ட சிறப்பு பிரிவிலும், காவல்துறை தலைமை இயக்குநரின் அலுவலகத்திலும் கிடைத்தல் வேண்டும்.

- சட்டம் மற்றும் ஆணையின் மீது, பொதுமக்களின் ஆதரவின் மீது, ஏற்புடைமையின் மீது, ஒளிவுமறைவின்மையின் மீது, தடையில்லாத தகவல் தொடர்பின் மீது, ஏற்படவிருக்கின்ற சூழ்நிலை எதையும் எதிர்கொள்வதில் மற்றும் அறிவுகூர்மையை திரட்டுவது மற்றும் ஒருங்கிணைப்பதை ஆழப்படுத்துவது மிகவும் தெளிவானதாகும்.
- காவல்படையானது உச்சநிலையின் போது முழுமையான பதட்டத்துடன் இருத்தல் வேண்டும். காவல் நடவடிக்கையின் விளைவாக அவசரச் சிகிச்சையின் போது பதட்டங்கள் அதிகரிக்கக் கூடும். மற்றும் அதனால் பாதிக்கப்பட்ட நபர்களை கருணையுடன் கையாளுதல் வேண்டும்.
- அதிகாரத்தில் உள்ளவர்களும் அதிகார அமைப்பு நிலையில் உள்ளவர்களும் விசாரணைகளை முடிப்பதற்கு முன்பு பிரகடனங்கள் எதையும் செய்வதிலிருந்து தடுக்கப்படுதல் வேண்டும்.
- காவல்துறை அதிகார அமைப்புகளானது அனைத்து நேரங்களிலும் சிரமமான காலங்களில் நிருவாகத்திற்கு உதவி செய்யவிருக்கும் நபர்களின் மற்றும் அமைதியை குலைப்பவர்களின், குண்டர்களின் மற்றும் சமூகவிரோதிகளின் பட்டியல்களை அனைத்து நேரங்களிலும் தயார் செய்தலும் வைத்துவருதலும் வேண்டும்.
- அழிவுகள் ஏற்படுவதற்கான இடத்திலுள்ள தொடர்ச்சியான சட்டவிரோதிகளை இரும்புக்கரம் கொண்டு ஒடுக்குதல் வேண்டும்.
- சில ஆதாயங்களுக்காக சம்பவங்களை பெரிதாக்குகின்ற வெளியில் உள்ள தரப்பினர்களின், சாதிகளின், குழுக்களின் தலைவர்களை இரும்புக்கரம் கொண்டு ஒடுக்குதல் வேண்டும்.
- அறிவுகூர் கண்காணிப்பு நபர்களை தேர்ந்தெடுக்கும் போது தெரிந்த அடிப்படையில் இருத்தல் வேண்டும் மற்றும் நவீனமுறை கண்காணிப்பு மற்றும் அறிவுகூர் கண்காணிப்பை திரட்டுவதில் அவர்களுக்கு சிறந்த பயிற்சி அளிக்கப்படுதல் வேண்டும்.
- காவல்துறையின் நோக்கமானது கும்பலை கலைப்பதாக இருத்தல் வேண்டும். ஆகையால் தப்பிக்கும் வழித்தடங்களை அனுமதித்தல் வேண்டும் மற்றும் தங்கியிருக்கும் நபர்களை சாதுரியமாக சமாளித்தல் வேண்டும்.

- சுடுகருவிகளை திறம்பட கையாளுவதில் சிறந்த பயிற்சியை அளித்தல் வேண்டும்.
- காவல்துறையானது சமூக அரசியல் அடிப்படையை அளித்தல் வேண்டும். அதில் சட்டத்தின் மற்றும் நீதியின் அடிப்படையில் ஆணையை வைத்து வருதல் வேண்டும்.
- காவல் படைகளானது குறிப்பாக சிறப்பு ஆயுதக் காவலை அத்தகைய சூழ்நிலைகளில் அமர்த்தும்போது, கடுமையான மனப்பயிற்சிக்கு உட்படுத்துதல் வேண்டும். ஆகையால் அவர்கள் கும்பலின் கடுமையான நடத்தையின் கீழ் அமைதியாக ஆனால் திறம்பட செயல்படுதல் வேண்டும்.
- அமைதிக் குலைவு ஏற்படுவதற்கு முன்பு வட்டாரத்தில் உள்ள காவல்படையை பெரிய மற்றும் சிறிய நிகழ்வுகளை விரைவாகவும் திறம்படவும் கையாளும் பொருட்டு விரிவுபடுத்துதல் வேண்டும்.
- குற்றவியல் நடைமுறைத் தொகுப்புச் சட்டத்தின் 108ஆம் பிரிவின்படி கடுஞ்சொற்களால் பேசும் நபருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கலாம்.
- ஊர்வலம் தொடர்பாக அமைதிக்குலைவு ஏற்படவிருக்குமானால் அரசு காவல் சட்டத்தின் வகையங்களை பயன்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும்.
- காவல்துறை கண்காணிப்பாளர் இடர் ஏற்படவிருக்கும் இடத்தில் இருத்தல் வேண்டும் மற்றும் கீழ்நிலைப் பணியாளர்களால் சரிசெய்யப்படும் வரை சம்பவ இடத்தை விட்டுச் செல்லுதல் கூடாது.
- பயன்பாட்டிற்காக கிடைக்கக்கூடிய காவல்படையானது சட்டவிரோதக் கும்பலை கட்டுப்படுத்துவதற்கு அல்லது தடுப்பதற்கு போதியதாக இல்லாதிருக்குமானால் காவல்படையை பயன்படுத்தும் முயற்சியை கையாளுதல் கூடாது. அவ்வாறு கையாளுவது அறிவிழந்த துன்பத்தை வரவழைப்பது ஒன்றாகும்.
- தொலைபேசிகளுடன்/ நிகரிகளுடன்/ உடனடி விரைவு காற்றாலை செய்திகளுடன் உடன் கட்டுப்பாட்டு அறையை உடனடியாக நிறுவுதல் வேண்டும்.
- பரப்பிடத்தை மண்டலங்களாக பிரித்தல் வேண்டும். மற்றும் ஒவ்வொரு மண்டலமும் காவல் துணை கண்காணிப்பாளரின் கீழ் வருதல் வேண்டும் மற்றும் கட்டுப்பாட்டு அறை வாகனத்தால் ரோந்து காவல் புரிதல் வேண்டும். அது ஆயுத காவலர்களை மற்றும் உடனடி விரைவு காற்றலை செய்தி வசதிகளுடன் இருத்தல் வேண்டும்.
- நேர்மையான காவல் அலுவலர் கட்டுப்பாட்டு அறைக்கு பொறுப்பு வகித்தல் வேண்டும் மற்றும் கட்டுப்பாட்டு அறைக்கு தொலைபேசுவதற்கு மற்றும் தகவலை அளிப்பதற்கு பொதுமக்களை அனுமதித்தல் வேண்டும்.
- அந்த பரப்பிடத்தில் இதற்கு முன்பு பணிபுரிந்த அலுவலரை வரவழைத்தல் வேண்டும். கட்டுப்பாட்டு அறையானது போதிய சமாளிக்கும் படைகளை கொண்டிருத்தல்

வேண்டும் மற்றும் ரோந்து வாகனங்களை அதனுடைய தொடர்புடைய பரப்பிடங்களில் கண்காணிப்புடன் ரோந்து புரிவதற்கு பணிப்புரைகள் பிறப்பித்தல் வேண்டும்.

- மாவட்ட காவல்படையானது வலிமையுடன் இருப்பதை உறுதி செய்வது மாவட்டக் காவல் துறை கண்காணிப்பாளரின் கடமையாகும். அவர் தினந்தோறும் ஆயுத சிறப்புப் படை அணி வகுப்பில் மற்றும் வாகனங்கள் சோதனைகளில் கலந்து கொள்ளுதல் வேண்டும்.
- தீயசக்தி படைத்தவர்களுடன் காவலர்களின் தொடர்பினை துண்டித்தல் வேண்டும். உயர் காவல் துறை அலுவலர்கள் சிறந்த பணியை மேற்கொள்ளும் கீழ்நிலை பணியாளர்களுக்கு வெகுமதி அளித்தல் வேண்டும்.
- காவல் துறை அலுவலர்களுக்கு பதவி உயர்வு அளிக்கும் போது நேர்மை மற்றும் நியாயத்தை கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.
- அனைத்து நபர்களும் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை புத்தாக்கப் பயிற்சியை மேற்கொள்ளுதல் வேண்டும்.
- சாதிமுறையை கலைவதற்கு அரசு சாரா அமைப்புகளை (NGO) மேடை நாடகங்களுக்கு மற்றும் பிற கிராமிய கலைமுறைகளுக்கு அனுமதிக்கலாம் (சாதிக்கொடுமைகளை அகற்றுவதற்கான தனிக் குறிப்பைக் காண்க).
- பல்வேறு தேசிய நிறுவனங்கள் தாழ்த்தப்பட்டோர் நிலங்களை அபகரிப்பதிலிருந்து தடுப்பதற்கு திறம்பட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.
- குறித்த சில இடங்களில் தாழ்த்தப்பட்டோர்களுக்கான மற்றும் தாழ்த்தப்பட்ட பழங்குடியினர்களுக்கான தனிப்பட்ட எரிக்கும் அல்லது புதைக்கும் வளாகங்கள் வெளிப்படையானதாக இல்லை. அதன் விளைவாக அவர்களுக்கிடையே மோதல் நிகழ்கிறது. ஆகையால் அவர்களுக்காக தெளிவான பாதைகளை உருவாக்கித் தருதல் வேண்டும்.
- சண்டை சச்சரவுகளை தூண்டுகிற சாதியை அடிப்படையாகக் கொண்ட அமைப்புகளை தடைசெய்தல் வேண்டும். மற்றும் அந்த அமைப்புடன் தொடர்பு வைத்துள்ள மக்களை தண்டித்தல் வேண்டும்.
- பழிபாவமஞ்சாத வட்டித்தொழிலாளர்கள் மற்றும் கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள்– விற்பவர்கள் போன்ற சமூக விரோதிகளை சமாளிக்கப்படுதல்.
- தேவையற்ற செயல்விளக்கக் கூட்டங்களுக்கும், ஊர்வலங்களுக்கும் அனுமதி மறுக்கப்படுதல் வேண்டும்.
- சாதியுணர்வு பற்றி மக்களுக்கு கற்பிப்பதற்கு கிராம மட்டக் குழுக்கள் அமைத்திட வேண்டும்.

- சாதி மோதல்களைத் தூண்டும் ஆற்றலுடைய விளம்பரத் தட்டிகளும் விளம்பரச் சாரங்களும் முற்றிலும் தடைசெய்யப்பட வேண்டும். மற்றும் இந்த வேலையைச் செய்யும் அச்சகங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.
- பொது சொத்திற்கு அழிவை உண்டாக்குவோரிடம் கனிவு காட்டப்படுதலாகாது.
- காவல்துறை, பல்வேறு சமுதாயங்களின் எதிர்ச்செயல் மற்றும் சமுதாயங்களின் வட்டாரத் தலைவர்களின் உள்நோக்கம் போன்ற நிகழ்வின் வளர்ச்சிப் படிகளை ஆய்வு செய்ய வேண்டும்.
- கூடுதல் வேவுத் தகவல் சேகரிக்கப்பட்டு அவற்றின் வெளிப்படையான மற்றும் ரகசிய திட்டங்கள் ஆய்வு செய்யப்பட வேண்டும்.
- காவல்துறையானது, ஒழுங்குமுறை ஆணைகளையும் அமைதிக்குழு முடிவுகளையும் நடைமுறைப்படுத்துவதில் முற்றிலும் நடுநிலை வகித்தல் வேண்டும்.
- அப்படியிருந்தும் வன்முறை ஏற்படுமானால், காயமடைந்தோர் சிகிச்சைக்காக மருத்துவமனைகளுக்குக் கொண்டு போகப்படுதல் வேண்டும், முதலுதவி, மருத்துவக் கவனிப்பு மற்றும் தீருதவி நடவடிக்கைகள் பாகுபாடின்றி விரைவாக செயற்படுத்தப்படுதல் வேண்டும். அசம்பாவிதம் எதுவும் இருக்குமாயின் இறந்துபோன நபர்கள் உடனடியாக பிரேதப் பரிசோதனைக்காக மருத்துவமனைக்கு அப்புறப்படுத்தப்பட்டு இயல்புநிலை மீட்கப்படுதல் வேண்டும். அடுத்துள்ள உறவினர் இரகசியமாக வைத்து கருணையுடன் நடத்தப்படுதல் வேண்டும்.
- அதிக எண்ணிக்கையில் மகளிர் காவலர்களுக்குப் பயிற்சியளிக்கத் தவறியது ஒரு பற்றாக்குறை என்பது மற்றொரு கருத்தாகும்.
  (பெரிய சட்ட–ஒழுங்கு நிலைமைகளில் அவர்கள் மிகவும் கடப்பாடாக ஆவதுடன் அவர்களுக்கு இணையான ஆண்களால் பாதுகாக்கப்படவும் வேண்டியதாகிறது என்பது சமீபமான கடந்தகால நம் அனுபவம் காட்டியிருக்கிறது. அவர்களின் பங்கானது குறிப்பான நிகழ்வில் பெண்களுடன் நடத்தப்படுவதற்கு மட்டுமே வரம்பிடப்பட வேண்டுமேயன்றி அவர்கள் கலகம் ஒன்றை அடக்குவதற்காக தெரிந்தனுப்பப்படுதலாகாது. கலக நிலைமை ஒன்றில் மகளிர் காவலர்கள் சுலபமாக சமூக விரோதிகளிடம் பலியாகின்றனர்).
- காவல்துறை மீதான நம்பிக்கையும் பெயரும் காப்பாற்றப்படுவது உறுதிசெய்யப்படுதல் வேண்டும். மாவட்ட காவல் துறை தலைமையானது சமுதாயத்தின் பல்வேறு அமைப்பு, ஊடகம் மற்றும் அரசு சாரா நிறுவனங்களின் நன்நோக்கு ஆகியவற்றுடன் காலமுறையான நடவடிக்கை மூலமாக இது தொடர்பாக பெரிதான மாற்றங்களைக் கொண்டுவர முடியும். அமைதிகாக்கும் செயலினை எளிதாக்குவதில் காவல்துறையினருக்குப் பயிற்சியளிக்கக் கூடும்.

- கொந்தளிக்கும் கூட்ட நடவடிக்கைகள், சமுதாயக் கலகம், வகுப்புவாத மோதல்கள் முதலானவை போன்ற நிலைமைகளைச் சமாளிப்பதற்கு நன்று தேர்ச்சிபெற்றதும் நன்கு செயல்படுவதுமான அமைப்பலகுகள் உருவாக்கப்படுதல் வேண்டும். அவர்கள் வழக்க நேரங்களின்போது கொந்தளிக்கும் கூட்ட மனப்போக்கு, மக்கள் நட்பு அணுகுமுறை மற்றும் அவர்களைச் சமாளிக்கும் வழிவகை ஆகியவற்றில் பயிற்சியளிக்கப்படுதல் வேண்டும். அத்தகைய அமைப்பலகுகள், அனைத்து மாவட்டத் தலைமையிடங்களிலும், குறிப்பாக, சமுதாயக் கலகங்கள் ஏற்படுகிற தென்மாவட்டங்களில், அனைத்து நேரங்களிலும் தயார் நிலையில் இருத்தல் வேண்டும்.
- பிரச்சனை ஏற்படுத்துபவர்கள் அடையாளங்காணப்பட்டு, வேவுப் பிரிவுகள் சட்ட–ஒழுங்கு பிரச்சனை எதுவும் உள்ளதை முன்னறியுமாயின், சட்டப்படி காவலில் வைக்கப்படுதல் வேண்டும்.
- காவல்படையினர், மோசமான சினமூட்டலின் போதும் கூட மிகவும் கட்டுப்பாட்டையும் சுய கட்டுப்பாட்டையும் கடைபிடித்தல் வேண்டும். மேலும், எந்தச் சூழ்நிலையிலும் செய்திபரப்பக்கூடிய அல்லது பழிவாங்கும் மனப்போக்கில் நடவடிக்கை எடுக்கலாகாது.
- காவல்துறையினர், காவல்துறை புகைப்படம்பிடிப்போர், சினிமா அல்லது புகைப்பட கருவிகளை வைத்துக்கொண்டு நிகழ்வுகளின் வரிசைகள் பயன்படுத்தப்படும் வலிமையின் விவரங்கள், இரு பக்கங்களிலும் ஏற்படும் சேதம் முதலானவற்றை பிந்தியதாக காவல்துறைக்கு எதிராக வணையப்படும் பொய்யான குற்றங்களைத் தெளிவுபடுத்துவதற்காக படம்பிடிக்க உள்ளனர் என்பதை உறுதிசெய்தல் வேண்டும்.
- பிரச்சனையுள்ள இடத்தில் நியமிக்கப்படும் காவல்படையினர், தம் மூத்தவர்களின் அறிவுரையின்படி மட்டுமே செயல்பட வேண்டுமேயன்றி தன்னிச்சையாக செயல்படுதலாகாது. மரணத்தை ஏற்படுத்தும் காயங்களைத் தவிர்ப்பதற்காக குண்டாந்தடிகளுக்குப் பதிலாக பிரம்புகள் அவர்களுக்குக் கொடுக்கப்படுதல் வேண்டும்.
- இந்தப் பகுதிகளில் நேர்மையும் பாகுபாடுகாட்டாதவரும் ஆன காவல்துறை ஆய்வாளர்கள் நியமிக்கப்படுதல் வேண்டும். அவர்கள் தாம் சாதி அல்லது சமுதாயம் கருதி தள்ளாடுவதற்குத் தம்மை அனுமதிக்கக் கூடாது.
- அவ்வப்போது பொதுமக்கள் மத்தியில் பல்வேறு சமுதாயத்தினர் மற்றும் காவல் பணியாளர்கள் பங்குகொள்ளும் விளையாட்டுகள் நடத்தப்படுதல் வேண்டும். இது சமுதாய அடையாளமின்றி தொகுப்பினர் நலனையும் தோழமையுணர்வையும் வளர்ப்பதாகும்.
- தலித்களின் பிரச்சனைகளை சமாளிக்கையில் மனித உரிமைகளின் அளவுகள் மீறப்படுவது தவிர்க்கப்படலாம்.

- சாதிச் சண்டைகளின் விளைவுகள் மற்றும் காரணங்கள் பற்றி காவல் பணியினருக்கு பயிற்சி கொடுக்கப்படலாம்.
- சாதிச் சண்டைகள் ஏற்படுவதற்கு மிகவும் உணர்வுமிக்கப் பகுதிகளில் புதிய காவல் துறை நிலையங்கள் திறக்கப்படுதல் வேண்டும்.
- உணர்வுமிக்க பகுதிகளில் அமைந்துள்ள காவல்நிலையங்கள் அனைத்திற்கும் நவீன தகவல் தொடர்பு சாதனங்கள் வகைசெய்யப்படுதல் வேண்டும்.
- காவல்துறையினர் கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்கள் மற்றும் விற்பவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- காவல்துறையினர், பிரச்சனை ஏற்படுத்துபவர்களைத் தடுப்புக் காவலின் கீழ் பதிவு செய்தல் வேண்டும்.
- அனைத்து ஊர்திகளும் கடுமையான சோதனையின் கீழ் கொண்டுவந்து, ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டு குற்றவாளிகள் இரக்கமின்றி தண்டிக்கப்படுதல் வேண்டும்.
- கோயில் பண்டிகைகள், பொதுக் கூட்டங்கள் மற்றும் ஜெபக்கூட்டங்கள் ஆகியவற்றிற்குத் தேவையான காவல் துறை பாதுகாப்பு வகை செய்யப்படுதல் வேண்டும்.
- கலகத்தின் போது அப்பாவி மக்கள் மீது தடியடி பிரயோகிப்பதை காவல்துறையினர் தவிர்த்தல் வேண்டும். காவல்துறையினர், மனித உணர்வுகளை மதிக்கவும் வேண்டும்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பகுதி II

அத்தியாயம் 7

மாநில அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகள்

- ஒரு சமயசார்பற்ற ஜனநாயகத்தில் (secular democracy) மாநிலம் எந்த ஒரு சமூகத்தை (அ) சமயம் சார்ந்த நிகழ்ச்சிகளுக்கு ஆதரவு அளிக்கலாகாது.

* குஜராத் மாதிரி அடிப்படையில் தடை மக்களின் சமூக நலனை உறுதிப்படுத்துவதற்கு அறிமுகப்படுத்தப்பட வேண்டியதாய் இருக்கிறது.

பொறுப்புகளில் இல்லாமலிருப்பது அதற்குப் பதிலாக நாட்டுப்புறத்தில் உள்ளவர்களை அவர்கள் பலனடையும் வகையில் பணியமர்த்தம் செய்யப்படுவதை உறுதி செய்வதற்கு கிராமத்தில் பல வேலைகளை கண்டிப்பாக உருவாக்குதல் வேண்டும் அவர்கள் அவர்களுடைய பணியில் இருந்து கொண்டே இருக்குமாறும் காலத்தை வீணாக்காமல் சமூகக் கலவரங்களில் ஒரு பகுதியிலிருந்து விலகியிருக்குமாறு செய்தல் வேண்டும்.

* அரசு தனிச்சிறப்புடன் வடிவமைக்கப்பட்ட கல்வி நிறுவனங்களை திறப்பதனால் சிறப்புரிமையின் கீழ் உள்ளவர்களுக்கு தரமான கல்வியை ஏற்படுத்தித் தருவதற்கு.
* ஆங்கிலக் கல்வி தகவல் மற்றும் மென்மையான திறமைகளை மேம்படுத்துவதற்கான வாய்ப்பினை அளிக்கிறது. அதனால் தேசிய அளவில் வேலை வாய்ப்புகள் உறுதி செய்யப்படும்.
* சமூகக் கலவரம் ஏற்படும் போது ஏற்படும் இக்கட்டான சூழ்நிலைகளின் போது மின்னணு மற்றும் அச்சுத்துறை ஊடகங்களின் செயற்பாடு மோசமான விளைவுகளை ஏற்படுத்தத்தக்கதாக இருக்கிறது. ஒழுக்கத்திற்கு எதிரானதாக மறியலும் மனிதாபிமானமற்ற முறையில் எது இருப்பினும் அது தொலைக்காட்சி மூலம் ஒலிபரப்புவது, அச்சடித்துக் காட்டிக் கொண்டிருப்பது, அக்கறையில்லாத தீங்கினை விளைவிக்கக் கூடிய தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதாக இருக்கும்.
* தொலைக்காட்சி / ஒலிபரப்புதல் / அச்சிடுதல் போன்ற பொருட்பாடு மட்டும் மாநில உள்துறையிலிருந்து வரும் உறுப்பினர்களுடன் இந்தியத் தகவல் பணியின் முதுநிலை அலுவலர் ஒருவரின் தலைமையிலுள்ள ஊடக ஒழுங்குமுறைப்படுத்தும் அழியாத அமைப்பினால் மற்றும் காவல் துறை அதன்பின்பு இந்தியப் பத்திரிக்கை மற்ற மொழியின் சரிபார்த்தல் ஒப்புதலைப் பெறவேண்டும்.
* பத்திரிக்கை மாற்றத்தால் காலமுறைப்படி எளிதில் உணர்ச்சி வயப்படுத்தும் ஊடகம் பொறுப்புள்ள தலைகள் மற்றும் நாட்டின் குடிமக்கள் ஊடகம் பத்திரிக்கை மன்றத்தில் நோக்க எல்லையின் கீழ் கொண்டு வரப்படவேண்டும். பின்னால் வருபவை ஊடக மன்றம் என மறு பெயரிடப்படும். இதுவரை பத்திரிக்கை அதிகார அமைப்பு எதற்கும் கணக்கிட அதிகாரக் கோருதலைச் செய்ய இயலாது. தொலைக்காட்சி தொடர்பு பொது சொத்தாக அவ்வாறு செய்யப்பட வேண்டியதாயிருக்கிறது. தனியார் தொலைக்காட்சி வரிசையில் மேலும் உச்ச நோக்கும் காலத்தின் போது ஒலிபரப்புதல் கல்வியின் பேரில்

திட்டங்களை மற்றும் கோரிக்கையை தனியாகப் பார்ப்பது இதைத் தவிர சமூகத்திற்கு தொடர்புடைய தகவலை, சரியான தன்மையுள்ள திட்டம் அதே வரிசைகள் அடிப்படையில் அகில இந்திய வானொலி நிலையம் மற்றும் அரசு தொலைக்காட்சி நிலையம் நாடகத்தினை, தொடர்களை அல்லது பேசும் காட்சியை முக்கிய நோக்கத்தின் போது உணர்ச்சி வயப்படும் மக்களுக்கு தேவைப்படும் சமூக நல்லிணக்கத்தை மற்றும் அமைதியை ஏற்படுத்தக் கூடியவற்றை வழங்காமல் ஒலிபரப்பு செய்து கொண்டிருக்கிறது.

* அங்கே மாவட்ட நிர்வாகம் மற்றும் காவல் துறையினருக்கிடையே கூட்டம் ஒன்று கூட்டப்படுதல் வேண்டும் அவர்கள் ஒரு பக்கமும் மற்றும் தலைவர்கள் மற்றும் சமூதாயத்தின் பிரிவுகளைப் பொறுத்து அது ஒரு பக்கமும் இருக்கும் விழாக்கள் மற்றும் நிகழ்ச்சிகளை முன்னிட்டு அதில் கலந்து கொள்பவர்கள் கலவர செயல்களில் மனம் போன போக்கில் ஈடுபடுவதன் விளைவாக ஏற்படும் முடிவுகளைப் பற்றி கூற வேண்டும் மற்றும் அமைதியைக் குலைக்கும் நோ்வில் கெடுபிடியான நடவடிக்கை பின்பற்றப்படும்.

* ஜாதிப் பிரச்சனைகள் சமூக பொருளாதாரத்தை மட்டும் பொறுத்ததல்ல. அடிக்கடி வன்கொடுமைகள் நடக்கின்ற பகுதியொன்றும் புள்ளி விவரங்கள் பேரின் அடிப்படையில் அத்தகைய ஒன்றாக விளங்குகிறது. உதாரணமாக குடியுரிமைகள் சட்டத்தின் பாதுகாப்பின்படி தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் மற்றும் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பழங்குடியினர் சட்டத்திற்கு எதிரான வன் கொடுமைகளைத் தடுப்பது சில வழிகளில் உள்ளபடியாக அது ஒரு தவறான வழிக்கு இட்டுச் செல்லக் கூடிய அறிகுறியாக உள்ளது. உண்மையில் அந்த தலித்துகள் பொருளாதார முன்னேற்றத்தில் மற்றும் கல்வியில் மற்றும் வேலை பெறுவதில் மிகச் சாதாரண நிலையிலேயே உள்ளார்கள். அவர்கள் அரசியலில் இடம் பிடிக்க முயலுகிறார்கள். அவர்களுடைய கோரிக்கை அரசியல்வாதிகள் அவர்கள் மேலே வருவதற்காக செல்வாக்கில் அல்லது கட்சி வடிவ அமைப்பிற்கு அதிகாரத்தை அவர்களுக்கு ஆரம்ப பிரதிநிதித்துவத்தை மட்டுமே கொடுக்கிறார்கள். பொதுவாக தலித்களின் இந்தக் கோரிக்கை அறிவிப்பிற்கு பல்வேறு அரசியல் கட்சிகளின் மெய்யறிவிற்கு விடப்பட்டிருக்கிறது. ஒய்வு பெற்ற அரசு ஊழியர்கள் ஊராட்சிகளின் தலைவர்களாக கண்மூடித்தனமாக கட்டாயமாக மாற்று உண்மையுடன் இல்லாமல் இருக்கின்ற மரபு தலைவர்களை எதிர்ப்பதாக மற்றும் மொத்த அரசியல் நோக்கத்தை அடைவதை உறுதிபடுத்துவதற்கு சாதி அடையாளம் காணப்படுகின்றன.

மரபு

(ஊராட்சிகள் சாதித்தலைவர்கள் அவர்களுடைய விடாப்பிடியான அணுகுமுறையை உடையவர்களாக இருப்பர் அவர்கள் தலைமை அளவில் மற்றும் சாதிகளுக்குள் ஒருவருக்கொருவர் சார்ந்திருப்பதை பாராட்டினால் அரசு மாநில அலுவற் பணிகளை மதிப்பாய்வு செய்ய இருக்கிறது.)

* நிர்வாகத்தின் தன்மை சேரியிலுள்ள சிறுபான்மை சமூகங்கள் ஓரளவுக்கு செயல்பாட்டை சீராகச் செய்யும்போது நீண்ட காலமொன்றிற்கு தீங்கின் தாக்கத்தைப் பெற்றிருக்கும். தனி நியாய விலைக் கடைகளை, தனி தண்ணீர் வழங்குதல் முறைகளை ஏற்படுத்தித்தருவது மற்றும் தனி பள்ளிக் கூடங்கள் ஆழமாக வேறுபாட்டினை ஏற்படுத்தும். இருந்தபோதிலும் இது உடனடியாக தணிக்க வேண்டியது. நெடுங்காலமாக இருவருக்குமிடையில் ஒவ்வொருவருக்கும் எதிரான சமுதாயங்களை குழியில் தள்ளக்கூடியதாக இருக்கிறது.

(சமத்துவபுரம் சோதனை வெற்றியைத் தந்துள்ளதாக நிரூபிக்கப்படவில்லை. அரசு ஆழ்ந்த ஆய்வொன்றிற்குப் பின்பு கருத்தினை மேம்படுத்தியும் மற்றும் ஏற்றுக் கொள்ளத்தக்க வடிவத்தில் மீட்டெடுக்கலாம்.)

தயார்படுத்துதல்:

தயார் செய்தல் மாவட்டங்களுக்கிடையே ஒருங்கிணைப்பிற்காக ஈடுபடுதல் இதுவரை கூட்டமாகக் கூடுதல்கள் வேறுபட்ட மாவட்டங்களிலிருந்து கொண்டு வரப்பட்டு ஒருங்கிணைக்கப்படுகின்றன. எடுக்கப்பட்ட ஒரு முடிவு முற்றிலுமாக தடை செய்வதற்கு அல்லது ஒழுங்குமுறைப்படுத்துவதற்கு பிறகு போதுமான அளவில் காவல்படையை இறக்கப்பட வேண்டியதாய் இருக்கிறது. நிர்வாகம் ஒருங்கிணைப்பு எதனையும் தலைமை தாங்குவதற்கு அல்லது கடைக்கும் முனையில் சேருதல் அவர்களை கூடுவதற்கு அனுமதிக்கலாம். மற்றும் அதன்பிறகு அவர்களை கலைந்து செல்வதற்கான முயற்சியை மேற்கொள்ளலாம். இது முளையிலேயே கிள்ளி எறியப்பட்டிருக்கிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பகுதி II

அத்தியாயம் 8

இராமநாதபுரத்தில் பல முன்னணிகள் பேரில் செய்யப்படவேண்டிய விஷயங்கள்:-

தொழில்:-

தொழில்களின் இருப்பு நினைக்கும் வழிமுறையை மாற்றியமைத்திருக்கும். மற்றும் இந்தப்பகுதியில் வாழும் மக்களின் அடிப்படைத் தன்மையை மாற்றியமைத்திருக்கும் பொருளாதாரத்தில் மேம்பட்டிருக்கும் பகுதி சமூதாய அல்லது கலவர நிகழ்வுகளை அனுமதிப்பதில்லை. பயப்படும் மனநிலையை ரொம்ப காலத்திற்கு அனுமதிப்பதில்லை. இராமநாதபுரம் மாவட்டத்தின் மக்கள் தொகையின் ஏற்கத் தக்க விகிதம் திருப்பூர் பின்னலாடை தொழிற்சாலைகளில் பணிபுரிந்து கொண்டிருக்கிறது. இந்த மக்களுக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்குவதற்கு ஒரு நெசவுத் தொகுதி புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகத்தின் வரிசைகள் அடிப்படையில் மேம்படுத்தப்படலாம்.

கல்வி:-

இராமநாதபுரத்தில் முறையே மூன்று தாலுகாக்கள் உள்ளன. கடலாடி, முதுகுளத்தூர் மற்றும் திருவாடானை ஆகிய பகுதிகளில் உயர் கல்விக்கான அரசுக் கல்லூரிகள் எதனையும் பெற்றிருக்கவில்லை. கலை மற்றும் அறிவியல், தொழில்நட்பக் கல்லூரிகள் மற்றும் தொழில் பயிற்சி நிறுவனங்கள் தகுதிகளை உயர்த்திக் கொள்வதற்கு இதை மூன்று வட்டங்களிலும் தொடங்கப்படலாம். அது அரசு / தனியார் துறைகளில் வேலை வாய்ப்பினை பெறுவதற்கு அவர்களுக்குப் போதுமானதாக இருக்கும்

நல்வாழ்வு:-

ஒரு எம்.பி.பி.எஸ் பட்டதாரிக்காக போதுமான மதிப்பெண்ணை அரசு வழங்கியிருந்த போதிலும் அவருடைய முதுநிலை படிப்பை செய்யும் பொழுது இராமநாதபுரத்தில் பணியாற்றியிருக்கிறாரோ அங்கே இராமநாதபுரத்தில் பணி செய்வதற்கு அவருக்கு விருப்பமில்லாமலிருக்கிறது. சிறப்பு நோ்வாக போதுமான மதிப்பெண் ஓரளவிற்கு கூட்டப்படலாம். இராமநாதபுரத்தில் மருத்துவர் காலியிடங்களின் பிரச்சனையை கூறுவதற்கு மாவட்ட ஆட்சியரின் தலைமையிலான குழுவானது ஒருவற்கு மருத்துவத்துக்கான தொகுப்பூதியத்தின் அடிப்படையில் பணியமர்த்தம் செய்வதற்கு அதிகாரமளிக்கப்படலாம். மற்றும் வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மூப்பு அடிப்படையில் இல்லாமல் உள்ளூர் மருத்துவர்களுக்கு முன்னுரிமை அளிக்கலாம். மாநிலம் முழுவதும் இராமநாதபுர மாவட்ட

மக்கள் மட்டும் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையை அமைப்பதற்கு 100 கிலோ மீட்டர் பயணம் செய்ய வேண்டியதாயிருக்கிறது. அரசு முன்னுரிமை அடிப்படையில் இராமநாதபுரத்தில் மருத்துவக் கல்லூரி ஒன்றினை அமைக்க அரசு ஆவன செய்யலாம். எனவே இராமநாதபுரத்தின் மக்கள் அத்தகைய அளவுக்கு கஷ்டப்படாமல் உடல் நலத்தைப் பெறுவர்.

மீன்வளம்:-

இராமநாதபுரம் மாநிலத்தில் பெரும் அளவிலான மீன்வளங்களையும் நீளமான கடற்கரையையும் கொண்டிருக்கிறது. இந்த மாவட்டத்தில் அதிகப்படியான எண்ணிக்கையில் மீன் பிடிக்கப்படுகிறது. இந்தியப் பக்கம் மீன்களின் இருப்பு அதிகமாக இல்லாததால் சில நேரங்களில் மீனவர்கள் IMBL -லைத் தாண்டிச் செல்கிறார்கள். அது எதிர்பார்க்காத நிகழ்வுகளை ஏற்படுத்துகிறது. இது மீனவர்களின் சேமத்தை மற்றும் பாதுகாப்பை பாதிக்கிறது. அரசு ஆழமான கடல் மற்றும் பல நாள் மீன்பிடித்தலை இந்தப் பிரச்சனையை சமாளிப்பதற்காக அறிமுகப்படுத்தியிருக்கிறது. இராமநாதபுரத்திலிருந்து அல்லது இராமேஸ்வரத்திலிருந்து ஆழ்கடலுக்கு போவதை முன்னிட்டு மீனவர்கள் மேலும் 25 நாட்கள் சேர்க்கப்பட்டிருக்கிறது. செலவினை மற்றும் இதனால் அவர்கள் இந்தத் தொடக்கத்தை எடுத்துக் கொள்ள முடியாமல் இருக்கிறார்கள். அரசு மீனவர்களுக்கு மேலும் என்னென்ன மானியத்தின் மூலம் ஆதரவினை வழங்கலாம். ஆகையால் மீனவர் ஒரு நல்ல மற்றும் பாதுகாப்பான வாழ்க்கையை நடத்தலாம்.

சத்யமேவ ஜெயதே
TRUTH ALONE TRIUMPHS

பகுதி II

அத்தியாயம் 9

பிற கருத்துக்கள்:-

* சட்டம் மற்றும் ஒழுங்கை பராமரிக்க "காவலரின் நண்பன்" என்கிற பொதுக்கருத்தை அரசு ஏற்கலாம்.

* மனிதர்களிடத்தில் விழிப்புணர்வை புத்தாக்கம் செய்ய கல்வி அளித்தல்.

* அனைத்து சூழ்நிலையிலும் சிறுபான்மை இனத்தவர் பாதுகாப்பாக வாழ்கிறார்கள் என்பதை உறுதி செய்ய வேண்டும்.

* நீண்ட காலத்திற்கு சாதிகள் இரண்டாகக் கலந்திருப்பதற்கு கலப்பு திருமணங்களை ஊக்குவித்தல்.

* சாதிச்சச்சரவுகள் தொடர்பான வழக்குகளை நீதிமன்றங்கள் விரைந்து விசாரணையை முடித்தால், அரசின் மீதான நம்பகத்தன்மை அதிகரிக்கும்.

* கல்வி மற்றும் வேலை வாய்ப்புகளில் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்கு வழங்கப்படும் இடஒதுக்கீடு தொடர்பாக காலமுறை இடைவெளியில் வெள்ளை அறிக்கை வெளியிடுதல்.

* இடஒதுக்கீடு தொடர்பாக கண்காணிப்பதற்கு மாவட்ட அளவில் குழுக்கள் அமைத்தல்.

* சாதிக்கலவரம் நடைபெற்ற இடங்களில் வளர்ச்சிப்பணிகளை மேற்கொள்ளுதல்.

* வெளி நாட்டிலிருந்து பெறப்படும் நிதியுதவிகளை உன்னிப்பாக கண்காணித்தல்.

* சிறுபான்மையினரும் நலிவுற்றவர்களும் வசிக்கும் இடங்களை மது அற்ற இடங்களாக உருவாக்குதல்.

* சாதியின் பெயரால் உருவாக்கப்படும் சங்கங்களை தடைசெய்ய சட்டமியற்றி, அமைதிக்கு குந்தகம் விளைவிக்கும் செயல்களை தடுத்தல்.

* 100% கல்வியை வழங்க முயற்சித்தல்.

* ஊடகங்களின் செயல்களை முறைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளல் மற்றும் சாதிச்சாயம் பூசுபவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுத்தல்.

* கருணை அமைப்புகளை ஏற்படுத்தி, சாதிக்கலவரங்கள் நடைபெற்ற இடங்களில், தன்னார்வ சேவை வழங்கி மனித இதயங்களுக்கிடையில் நல்லுணர்வை உருவாக்குதல்.

பகுதி II

அத்தியாயம் 10

பொது மக்களுடைய எதிர்பார்ப்பு என்ன:-

அறியாமையால் ஏற்படும் முரண்பாடு, மக்கள் அறியாமையில் இருந்து தொலைத்து விடுவித்துக் கொள்ளுதல் வேண்டும். சமுதாயத்தின் அரசியலமைப்புக்குரிய அதிகார அமைப்புகள் மற்றும் வாதத்திற்கு இடமற்ற தலைவர்கள் மாத்திரமே எவர் ஒருவர் தன் வாழ்நாள் முழுவதும் பெரிய பணியை செய்கிறாரோ அவரையே ஒரு உண்மையான தலைவராக அங்கீகரிக்கப்பட வேண்டும். மக்கள் குடியுரிமையின் மற்றும் வன்முறைக்குச் செல்லாது கண்டனத்தின் ஆதரவாளர்களின் பொறுப்புகளையும் உணர்தல் வேண்டும். அவர்கள் வதந்திகளை முட்டுக்கட்டை போட்டும் மற்றும் அவைகளை பரவச் செய்தலும் கூடாது. அங்கே தீண்டாமை தொலைத்து விடுவித்துக் கொள்வதற்கு விரைவான தேவை ஒன்று இருக்கிறது. தீண்டாமை ஒரு சமூக புற்றுநோய். மிகப்பழமையான நேரத்திலிருந்து நம்முடைய சமூக உயிர்த் துடிப்புடையதை அழித்தொழிக்கும் அதன் வேரினை வெட்டுதல் வேண்டும். மக்களின் சிந்தனை நிலையில் / மனஞ்சார்ந்த எதிர்கால வாய்ப்பில் அடிப்படைக் கூற்றில் மாற்றத்தை செய்யப்படுத்துதல் வேண்டும். தீண்டாமை ஒரு சமூகத்தில் மனித சமூகத்தின் சமத்துவத்தை வற்புறுத்துபவன் மற்றும் அறிவுறுத்தப்படும் அதனின் கால இட முரண்பாடு அந்த அறப்போர் வகை நோ்மையற்றதன்மையுடைய இரக்கமற்றவரின் இந்த அடக்குமுறை செயலுக்காக நம் சமூகத்தில் கொண்டு செலுத்த வேண்டியதாய் இருக்கிறது. தவிர்க்க வேண்டிய பல கீழேயுள்ள தீண்டாமைக் கேடு நில உடைமை சார்ந்த சமூகத்தின் நிலப்பண்னை உரிமைமுறை மற்றும் மீதி புனிதமாகக் கருதப்படுகின்ற சமூகம் ஒன்று விரைவான தொழில் மயமாக ஆகின்றபோது அவைகள் அனைத்தும் தானாகவே மறைந்து விடும். நம்முடைய அரசமைப்பில் உறுப்புகள் 17 மற்றும் 35ல் தீண்டாமையை ஒழிக்கப்பட்டு மற்றும் வடிவம், வெறும் சட்டம் எதனாலும் அதன் நடைமுறை வழக்கத்தை தடுத்து நிறுத்தவும், இந்த கேடு முடிவதில்லை. இது ஒவ்வொரு குடிமகன், தன்னார்வ நிறுவனங்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாநில சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் ஒவ்வொருவரின் பங்கின் பேரில் தேவையான விடாமுயற்சியால் வேண்டுறுத்தப்படும். இந்தக் கேட்டை அடியோடு அழிப்பதற்கு எவ்வாறு தேவையான வேகத்தை மாற்றி கொண்டுவருவதற்கு அதிகமாக செய்தல் கூடும். அந்த மக்களுடன் நேரடித் தொடர்பில் வருகின்ற அலுவலர்கள் அத்தகைய வட்டாச்சியர்கள், மருத்துவர்கள், ஆசிரியர்கள் முதலானோர், தீண்டாமை ஒழுக்கம் சார்ந்த பொறுப்புரிமைகளை பற்றி அந்த கூட்டத்தில்

அறிவு புகட்டுவதற்கு பொதுவான அறிவுறுத்தல்கள் வழங்கப்படுதல் வேண்டும். மற்றும் தீண்டாமை நடைமுறை வழக்கத்திற்கு எதிராக சட்டத்தை மீறுவதற்காக சட்டத்தால் விதிக்கப்பட்ட தண்டங்கள் கிராம அளவிலான குழுக்கள் அமைத்து தடைகளுக்கு சாத்யம் பற்றி அறிவு புகட்டுவதற்கும் மற்றும் தலித்துகள் அவர்களின் உரிமைகள் மற்றும் வேண்டுமென்றே செய்யப்பட்ட மீறுகை எதற்கும் எதிராக விழிப்புணர்வோடு இருப்பதற்கு அவர்களை பாதுகாப்பதற்கு அவர்களைக் கேட்டுக் கொள்ளவும் தெரிவித்தல் வேண்டும். அவர்கள் சலுகைகளுக்கான உரிமைக் கோரிக்கையின் போது அவர்கள் சரியான கடமைகளைச் செய்வதற்குத் தேவையானதைப் பற்றி அவர்களுக்கு சொல்லப்படவேண்டும். தலித்துகள் அவர்களின் கடமைகள் மற்றும் பொறுப்புரிமைகள் நல்லொழுக்கம் கற்பித்தலில் தலித்தலைவர்கள் அதிகமாக செய்தல் வேண்டும். கல்வி கற்ற தலித்துக்கள் அவர்களின் கிராமங்களை அவ்வப்போது பார்வையிடுதல் வேண்டும். மற்றும் அவர்களுக்கு இடையே தூய்மையாகவும் உடல்நலம் பற்றிய தத்துவங்களின் பழக்கவழக்கங்கள், அழுகிய இறைச்சியை விட்டுவிடுவதற்கு, சாராயத்தை விட்டுவிடுவதற்கு மற்றும் தீண்டாமையை விட்டு விடுவதற்கு தேவையானதை அவர்களின் சகோதரனுக்கு ஆலோசனையும் அவர்கள் தலித் பெற்றோர்களுக்கு அவர்களின் குழந்தைகளை பள்ளிகள் மற்றும் கல்லூரிகளுக்கு அனுப்புவதற்கும், அவ்வாறு செய்வதற்கு அவர்களுக்கு உதவி செய்யவும் தூண்டுதல் வேண்டும். ஓய்வு பெற்ற தலித் தலைவர்கள் அவர்களின் மூதாதையர் கிராமங்களுக்குச் சென்று தங்கலாம். மற்றும் அவர்களின் ஓரினத்தைச் சேர்ந்த நபர்கள் பள்ளிகள், அனாதை இல்லங்கள் முதலானவற்றை தொடங்குவதற்கு பணி செல்லும் சாதி இந்துக்களில் பெருந்தன்மை வாய்ந்த மனநிலை உடையவருடன் இணைந்தும் அவர்கள், தீண்டாமையின் வழக்கமான செயலுக்கு எதிராக, உறுதியான பொதுக் கருத்தை உருவாக்கவும் அவர்கள் அவர்களிடம் நேர்மை மற்றும் நாணயம் ஆகியவற்றின் ஒழுக்கத்தை வளர்த்தல் வேண்டும். அவர்கள் ஒவ்வொன்றிற்காகவும் சாதி இந்துக்களை குற்றம் சாட்டும் பழக்கத்தை மற்றும் அதன் பகுதியில் கண்டிப்பின்மைக்காக மற்றும் நேர்மையற்றவைக்காக அவர்களால் கொடுக்கப்பட்ட தண்டனைக்காக இயல்பான குணத்தைத் தூண்டுகிற உணர்ச்சியை விட்டுவிடுதல் வேண்டும். அவர்கள் அவர்களின் குறைகளை சரிசெய்வதற்கு மற்றும் திறமையின் தரங்களை வளர்த்துக் கொள்வதற்கு முயற்சி செய்தல் வேண்டும். சலுகையின் பேரில், அவர்களின் கடமைகளை நிறைவேற்றுவதில் கண்டிப்பின்மையாக இருக்கும் நேர்வின் இளக்கரம் அவர்கள் கேட்டல் ஆகாது. அவர்கள் ஒவ்வொருவரிடமும் குறைகளை நிலையாக காணுவாரேயானால் பிற சாதி இந்துக்களின் எண்ணத்தில் எதிர் விளைவின் அதிர்வலையை அவர்களுக்கு உருவாக்கக் கூடும். ஒவ்வொரு பூச்சாண்டியிலும் பொய்த்தோற்றம் காண்பது ஒரு அறிவு சார்ந்த கொள்கையாக இருக்காது.

தலித்துகளிடையே பல உள்சாதிகள் இருப்பினும் அவர்களுக்கிடையேயான தீண்டாமை வழக்குகள் மிக அரிதானது இல்லை. ஆகையால் தலித்துகள் சாதி இந்துக்களால் பழித்துரைப்பதில் அவர்களின் உள் சாதிகளுக்கிடையே கலப்புத் திருமணம் நடைபெறுவதில்லை என்று கூறுவதில் அர்த்தம் இல்லை. முதல் படிநிலையாக, முக்கிற தீண்டாமை சாதிகளில் உள் சாதிகளுக்கிடையேயான திருமணத்தை முயற்சி செய்யலாம். இது மிகவும் எளிது. ஏனெனில் பழக்க வழக்கங்கள் மற்றும் முறைகள் ஒரே மாதிரியானதாக இருக்கும். நம்முடைய சமுதாயத்தில் தீண்டாமையை என்றென்றும் காத்துக் பேணுகையில் முக்கிய ஆக்கக்கூறு பொருளாதார பாதுகாப்பு, எழுதப்படிக்கத் தெரியாத மற்றும் சமயக் கொடுமையாக்கப்பட்டிருக்கும். இவை மூன்றில் பொருளாதார ஆக்கக்கூறு மிகவும் முக்கியமானதாகும். பொரும்பான்மை தலித்துக்கள் அவர்களுக்காக நிலம் அல்லது வீட்டுமனை எதையும் வைத்திருக்கவில்லை. அவர்கள் நிலக்கிழார்களுக்காக வெறும் கொத்தடிமைகளாக பணி செய்கிறார்கள் மற்றும் அநியாயமான கடன்காரர்களாகவும் இருக்கின்றனர். நிச்சயமாக கொத்தடிமைகள் அவசரகாலத்தின் போது விடுதலை அளிக்கப்பட்ட அடிமைகளாக இருந்தனர். ஆனால் அவர்களின் பொருத்தமான மறு வாழ்வு ஒரு பெரிய பிரச்சனையாகும். இருப்பினும் நிலங்களை அவர்களுக்காக ஒதுக்கியபோதும் அதில் முதலீடு செய்வதற்கு அவர்களுக்கு முதல் இல்லை. நிச்சயமாக அரசு அவர்களுக்கு கடன்களை கொடுத்து மற்றும் சுலபமான தவணை முறையில் அவைகளை வசூலிக்கவும், பல மாநில அரசுகள் அதையே செய்கின்றன. அடுத்து பொருளாதார பாதுகாப்புக்கு கல்வி சுவாமி விவேகானந்தருக்கு இணங்க மனிதனை ஏற்கனவே முழுநிறைவு செய்ய தெளிவாக காட்டுகிற கல்விபாடமே பிரகாசமானது. தலித்துக்கள் கல்விக்காக சிறப்பு வசதிகளை கொடுக்கப்பட்டுள்ள நாளுக்கு நாள் அதிகரிக்கின்ற பொது மற்றும் தொழில் நுட்பக் கல்விக்காக மைய மற்றும் மாநில அரசுகள் படிப்புதவித்தொகை வழங்குகின்றது. மிகவும் அதிகமாக தலித்துக்கள் மருத்துவர்கள் மற்றும் பொறியாளர்களாக ஆகின்றார்கள். இலவச கல்வி அனைத்து கல்வி மாவட்டங்களுக்கு அவைகளுக்கு உறுதியளிக்கப்பட்டுள்ள பட்டியலில் கண்ட சாதியினரின் மாணவர்கள் போட்டித் தேர்வுகளில் மற்றும் நிர்வாக அலுவலர்களாக ஆகுவதற்கு சிறப்பு இந்திய ஆட்சிப் பணி பயிற்சி மையங்கள் திறக்க அதிகாரம் கொடுத்தல் தேர்ச்சி பெறவதற்கு இதில் வருந்தக்கூடியது அதிகபட்சத்திற்கு சில தலித் மாணவர்கள் இத்தகைய வாய்ப்புகளை பயன்படுத்துவதில்லை. மற்றும் போராட்டங்களை நடத்துவதில் அவர்களின் சக்தியை வீணாகச் செலவு செய்கின்றனர். மற்றும் சட்டமுரணான அனைத்து செயல்பாடுகளில் மனம் போன போக்கில் செலவிடவும் பட்டியலில் கண்ட சாதியினர்கள் கல்வி நிறவனங்கள் மற்றும் அரசுப் பணிகளில் இட ஒதுக்கீட்டில் சமுதாயத்தில் அவர்களின் நிலையை உயர்த்துவதற்கு பிற சிறப்பு வசதிகள்

வழங்கப்பட்டுள்ளது. கடைசியாக நம்முடைய சமூக மதிப்பில் மற்றும் சமய கருத்தில் மறு ஆற்றுப்படுத்தும் பயிற்சி ஒன்றிற்காக, உடனடி தேவை இருக்கிறது. சமயத்தின் மூலமாக கொள்கைகள் கற்பிக்கப்பட்டு சமயத்தில் உறித்தோய்வு சுவாமி விவேகானந்தர் மற்றும் மகாத்மா காந்தி இதை புரிந்து கொண்டு அவர்கள் நாட்டு மக்களுக்கு சொன்னார்கள். ஏழைக்கு பணிசெய்வது அது உண்மையான கடவுள் வழிபாடாகும். மதம் மாற்றம் மட்டுமே தலித்துக்களுக்கு உதவியாக இருக்காது. தீண்டாமை அடியோடு அழிப்பது முடிவாக இருக்காது. இது சாதி இந்துக்களுக்கிடையே மனமாற்றத்தால் மட்டுமே செய்ய முடியும் என்று காந்தி சொன்னார். தீண்டாமையை சட்டத்தினை நடைமுறைப்படுத்துவதினால் அதனை நீக்க முடியாது. பெரும்பான்மை இந்துக்களால் இது கடவுளுக்கு எதிரான ஒரு குற்றம் என்று வருந்தும்போது அதைக் கண்டு அவர்கள் வெட்கப்படும்போது மாத்திரமே அதை நீக்கபடமுடியும். சாதி தனித்துவம் மாநிலத்தின் தெற்குப்பகுதியில் மிக அதிகமாக ஆழமாகப் பதிந்துள்ளது. மிகவும் அடிக்கடி அலுவலர்கள் அவர்களின் சாதியால் ஆளறியப்படுகிறது மற்றும் மாவட்ட நிர்வாகம் உள்ளூர் மக்கள் தொகையின் சாதி கூட்டமைப்பு தொடர்பாக கொண்டுள்ள உணர்ச்சி வயப்படும் பக்திக்கு பொருத்தமான மிகவும் பொறுப்பான அலுவலர்களை அமர்த்தப்படவேண்டும் மற்றும் அலுவல் தொடர்பான சாதி. இது கீழ்மட்ட காவல்துறை மற்றும் வருவாய்த் துறை அலுவலர்கள் பணியமர்த்தின் பொருட்பாட்டில் நல்லதையே கொண்டிருக்கும் ஒவ்வொரு சாதியிலிருந்து மாணவர்களில் சதவீதப்படி நிலவி வருகின்ற உறுதி செய்யும்போது சாதிகள் அனைத்தின் மாணவர்களுக்காக பொது விடுதிகளை தொடங்கவும் இது இந்திய ஆட்சிப் பணி பயிற்சி நிறுவனமாக இருக்கும் நேர்வில் வெற்றியார்ந்த செய்முறையை நிருப்பிக்கப்பட்டும் தலித்துக்கான தனியான விடுதிகள் நிறுவப்படவில்லை. சாதி இந்து மாணவர்கள் மற்றும் தலித் மாணவர்கள் சேர்ந்து வாழ்வதற்கும் மற்றும் சேர்ந்து உண்பதற்கும் வற்புறுத்தப்படவேண்டும். மாநகர விடுதிகளில் பலவற்றில் வழக்கமான செயலை ஏற்கனவே ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. மற்றும் புறநகர் பகுதியளவிலான புறநகரில் கூட விரிவாக்கப்பட்டிருக்கிறது. பள்ளிக்கூட மட்டத்தில் பொது விடுதிகள் இதை வெவ்வேறு சாதிக் குழுக்களிடையே கட்டிட வசதியைப் பயன்படுத்தப்பட வேண்டும். தலித்துக்கள் வீடுகளை சர்வஜனக் விடுதிகளுக்கு மாற்றப்படுதல் வேண்டும். தனியார் விடுதிகள் அவைகளில் தலித்துக்களை சேர்ப்பதற்கு ஊக்கப்படுத்துதுல் வேண்டும். பள்ளிகளில் பிரித்துவைக்கப்பட்ட வழக்கமான செயல்களை நேரிய முறையில் தண்டிக்கப்படல் வேண்டும். பள்ளிகளில் அடிக்கடி வெவ்வேறு சாதிகளில் இருந்து பள்ளிக் குழந்தைகளுக்காக கலப்படமான பாசறை அமைக்கப்படவேண்டும். அதனுடன் வேறுபட்ட சாதிகளிலிடமிருந்து மாணவர்கள் அடங்கியுள்ள சுற்றுலாக்களை அமைக்கப்பட வேண்டும்.

உணவுகள், விருந்துகள் மற்றும் நிகழ்ச்சிகள் சாதிகள் அடிப்படையில் அனைத்து மாணவர்களும் கலந்து கொள்வதற்கு அரசால் கூட தனியார் குழுமத்தால் அமைக்கப்படுதல் வேண்டும். அரசு சாரா அரசு நிறுவனங்கள் சாதி முறையினை அடியோடு அழிப்பதற்கு நாட்டிற்குள் இன்பப்பயணம் செல்லுதலுக்கு பாடல்கள் மற்றும் விளையாட்டுக்கள் மற்றும் பிற மக்களின் கலை வடிவங்கள் தயாரிப்பதற்கும் அமைப்புகளின் அடிப்படையில் சில சாதி அல்லது சமயம் மற்றும்அதன் குறிப்பிட்ட நோக்கத்துக்கான உணரும் திறன் அத்தகைய அமைப்புகளின் செயற்பாடுகள் தீவீரமாகக் கண்காணிக்கப்பட்டும் சோதிக்கப்பட்டும் தேவையானால் உடனடியாக தடைசெய்யவும் கூடும். அத்தகைய குழுக்களுடன் பற்றோ அல்லது தொடர்போ கொண்டுள்ள எவரும் கண்டிப்பாக அடங்கியிருத்தல் வேண்டும். நாடகம் மற்றும் திரையரங்கு மூலம் இளம் தலைமுறையினரின் நிகழ்வுகளில் ஒரே தனிமையில் இருப்பதை ஏற்படுத்தவேண்டியதாய் இருக்கிறது. நாடகங்களை உருவாக்கும் கருத்து சுதந்திரம் எண்ணங்களை பரிமாறிக் கொள்ளும் மற்றும் பிற நபர்களுடன் ஒருங்கிணைத்திருத்தல் மூலம் திறமைகளை மேம்படுத்துவதில் கலையாகும்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பகுதி II

அத்தியாயம் 11

அரசு மற்றும் தனியார் சொத்தின் அடிப்படையில் உச்சநீதிமன்றத்தின் அறிவுறுத்தல்: -

